

TENNECO

# நடத்தை விதிகள்

## Tennecoவின் பாதை

நமது நமது முக்கிய மதிப்பீடுகளே வழிநடத்தும்

# பொருளடக்க அட்டவணை


## வாருங்கள் தொடங்குவோம் .................. 3

## நம்மை இயக்குவது .................................. 4

நமது நோக்கம் 4
நமது முக்கிய மதிப்பீடுகள் 4
நமது மக்கள் மாதிரி 4
நமது விதிகள் 5

## வழிகாட்டுதல்களுக்காகக் கேட்டல்.......7

மனம் திறந்து பேசுதல் 7
பழிவாங்காமை 7

## ஒன்றாக வெற்றியடைதல் ........................ 8

ஒருவரையொருவர் மதித்தல் 9
அனைவரும் ஒன்றாக இருத்தல் 11
பாதுகாப்பை முதன்மை ஆக்குதல் 13
இதர தரப்பினருடன் பணிபுரிதல் 15

## நமது முதலீட்டைப் பாதுகாத்தல்........ 17

ஆவணங்கள் மற்றும் நிதியறிக்கைகளைத் துல்லியமாகப் பராமரித்தல் 18
ஆவணங்களைப் பராமரித்தல் 20
நமது சொத்தின் மீது அக்கறை கொள்ளுதல் 20
ரகசிய தகவல்களை பாதுகாத்தல் 24
தனியுரிமையைப் பாதுகாத்தல் 26
அரசுடன் தொடர்பு கொள்ளுதல் 28
அரசியல் செயல்பாட்டில் பங்கேற்றல் 30

## நமது தொழில்துறையை வழிநடத்துதல்........................................... 31

ஊழலை எதிர்த்துப் போராடுதல் 32
குற்றத்தை எதிர்த்துப் போராடுதல் 34
நேர்மையாகப் போட்டியிடுதல் 36
நலன் முரண்பாடுகளைத் தவிர்த்தல் 38
பரிசுகள், கேளிக்கை மற்றும் விருந்தோம்பல் பரிமாறிக்கொள்ளுதல் 40
சர்வதேச அளவில் வர்த்தகம் செய்வது 42

## நமது வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகத்தின் மீது அக்கறை கொள்ளுதல்............................ 44

பாதுகாப்பான, தரமான பொருட்களை உருவாக்குதல் 45
நேர்மையாக விற்பனை செய்தல் 47
பொறுப்புடன் தொடர்புக் கொள்ளுதல் 49
மனித உரிமைகளை பாதுகாத்தல் 51
சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் 53
சமூகத்திற்கு திரும்ப அளித்தல் 55

## உங்கள் உரிமத்தைப் பெறுதல் ............ 57

# வாருங்கள் தொடங்குவோம்



## Tenneco குழு:

இது ஆட்டோமோட்டிவ் தொழில்துறைக்கான சிறந்த நேரம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மாற்றம் மின்னல் வேகத்தில் நடப்பது மட்டுமல்லாமல், போட்டி நிலவரமும் நாம் தொழில் செய்யும் முறையை வியத்தகு முறையில் மாற்றியுள்ளது.

Tenneco-ல், பாரம்பரியமான மற்றும் யூகிக்கக்கூடிய சிந்தனை வழிகளில் இருந்து விலகி எங்களுடைய வழிகாட்டியாக சில முக்கியமான மதிப்பீடுகளை - அதாவது தீவிர நேர்மை, எளிமைப்படுத்துதல், நிறுவன வேகம், உறுதியான செயல்படுத்தல் மற்றும் வெற்றி போன்றவற்றை அடித்தளமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட வழக்கத்திற்கு மாறான வித்தியாசமான மனநிலையைக் கொண்டுள்ளோம். மாற்ற மனப்பான்மையை நாம் தொடர்ந்து கடைப்பிடித்து, நமது முக்கிய மதிப்பீடுகளைச் சார்ந்திருந்தால், உலகின் மிகவும் நம்பகமான கூட்டாளியாகவும், வாகனத் துறையில் சிறந்த உற்பத்தியாளராகவும் மாறுவதற்கான பாதை யதார்த்தமாக மாறும்.

நாங்கள் ஒரு உயர்ந்த இலக்கை அமைத்துள்ளோம், ஆனால் நாம் செய்ய நினைத்ததை நிறைவேற்றுவதற்கான நமது கூட்டுத் திறன்களில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். ஆனாலும், நாம் வெற்றியை எவ்வாறு அடைகிறோம் என்பது முக்கியமானது மற்றும் அது ஒருமைப்பாட்டுடன் தொடங்குகிறது மற்றும் முடிவடைகிறது என்பதை நினைவில் கொள்வது அவசியம் - இதுதான் நாம் செய்யும் அனைத்திற்கும் அடித்தளம். நாம் எப்போதும் சரியானதைச் சரியான வழியில் செய்வதில் உறுதியாக இருக்க வேண்டும் என்பதோடு, நம்முடைய தொழிலுக்குப் பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும்.

சரியானதைச் செய்வது வெளிப்படையாகத் தெரியாத சூழ்நிலையை நீங்கள் சந்திக்க நேரிடலாம், அதனால்தான் நம்மிடம் ஒரு நடத்தை நெறிமுறை உள்ளது. நம்முடைய வாடிக்கையாளர்கள், கூட்டாளிகள் மற்றும் ஒருவருக்கொருவர் நம்பிக்கையை பெற உதவும் வகையில் நாம் செயல்படுவதையும், நடந்துகொள்வதையும் உறுதிசெய்யும் நோக்கத்துடன் முக்கியமான கொள்கைகளின் தொகுப்பு இதற்கு வழிகாட்டுகிறது. கேள்விகள் அல்லது கவலைகளை எப்படி எழுப்புவது என்பது குறித்த வழிகாட்டுதல்கள் மற்றும் எடுத்துக்காட்டுகளுடன், கடினமான சூழ்நிலைகளிலும், சரியான முடிவுகளை எடுக்க உங்களுக்கு அதிகாரம் அளிக்கும் கருவி இது.

வெற்றிக்கு ஒவ்வொருடைய தனிப்பட்ட ஈடுபாடும் தேவை. தயவுசெய்து உங்களுடைய பங்களிப்பை அளிக்கும் விதத்தில் நம்முடைய நடத்தை நெறிமுறைகளைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ளுங்கள், அடிக்கடி அதைப் பார்க்கவும்.

நன்றி!

Jim Voss
*தலைமை நிர்வாக அதிகாரி*



# நம்மை இயக்குவது

நமது மக்களே நம்மை இயக்கும் சக்தியாகும். நாம் ஒவ்வொரு நாளும் பணிக்கு கொண்டு வருவது:

- மிகச் சிறப்பானவராக விளங்குவதற்கானதோர் வெறி
- விவரங்களுக்கு ஓர் ஒழுங்கமைந்த கவனம்
- போட்டிபோடும் ஒரு மனப்பான்மை
- நமது அர்ப்பணிப்புகளைச் செய்துகொடுப்பதற்கான அதிதீவிர உறுதிப்பாடு

# நமது மக்கள் மாதிரி

நமது முக்கிய மதிப்பீடுகளின் மீதே டென்னகோ மக்கள் மாதிரியைக் கட்டியுள்ளோம். தனிநபர்களாக நாம் எவ்விதம் சாதிக்கிறோம் என்பது, ஒரு நிறுவனமாக நாம் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதோடு இணைகிறோம். நமது விதிகள், நேர்மையுடன் இருந்து நமது வாணிபக் குறிக்கோள்களை எவ்வாறு அடைவது என்பதற்காக உங்களைத் தயார் செய்திட உதவுவதற்காகவே இருக்கின்றன.




**Tenneco வின் சக்தி வெளிப்படுத்திட, நமது மக்களின் சாத்திய திறன்களை கட்டவிழ்க்க வேண்டும்**

**சிறந்தவற்றை தேர்வு செய்தல்**
உயர்ந்த விளைவுகளை அளிப்பதற்கு சிறந்த திறமை கொண்டவர்கள்

**உகந்த சூழலை உருவாக்குக**
உள்சேர்த்தல், திறந்த, ஒன்றிணைந்து

**உருவாக்குதல் & மேம்படுத்துதல்**
எதிர்காலத்தை கருத்தில் கொண்ட தகுதிகள் & தலைமை

**அங்கீகாரம் & வெகுமதி**
செயல்திறன், மதிப்புகள், குழுப்பணி

# நமது நோக்கம்

உலகின் மிகவும் நம்பகமான கூட்டாளியாகவும், வாகனத் துறையில் சிறந்த உற்பத்தியாளராகவும் ஆகுவது.

# நமது முக்கிய மதிப்பீடுகள்

## தீவிர நேர்மை

நாம் ஆக்கபூர்வமான விவாதத்தில் ஈடுபட வேண்டும் மற்றும் ஆக்கபூர்வமான பதட்டத்தை உருவாக்க வேண்டும். நேர்மறையான நோக்கத்துடன் வெளிப்படையாகவும் கடுமையான முறையில் நேர்மையாகவும் இருங்கள். உண்மை என்பது நல்லிணக்கம்.

## எளிமையாக்கல்

நாம் அதிகாரத்துவத்தை நிராகரித்து, அடுக்குகளை குறைத்து கிடங்குகளை அகற்ற வேண்டும். தெளிவாக இருங்கள், தடைகளைத் தகர்த்தெறிந்து, ஒரு திட்டத்தைத் தயாரித்து, செயல்படுத்துவதில் கவனம் செலுத்துங்கள்.

## நிறுவன வேகம்

நாம் விரைவாக முடிவெடுக்கும், ஒரு உலகளாவிய குழு மற்றும் ஒரு நிறுவன கட்டமைப்பை உருவாக்க வேண்டும். விரைவாகச் செயல்படுத்துவது முக்கியம்.

## உறுதியான முறையில் செயல்படுத்தல்

நமது கலாச்சாரத்தின் மூலைக்கல்லாகவும், நாம் செய்யும் அனைத்திற்கும் அடித்தளமாகவும் இருக்கும் பொறுப்புக்கூறல் மற்றும் உரிமை மனப்பான்மையை நாம் தொடர்ந்து பேண வேண்டும்.

## வெற்றி

நம்முடைய தொழிலாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை நாம் பெற வேண்டும்.

# நமது விதிகள்

## நமது முக்கிய மதிப்பீடுகளை நாம் எவ்வாறு பழக்கத்திற்குக் கொண்டு வருகிறோம் என்பதையே நமது விதிகள் காண்பிக்கின்றன.

Tenneco-வில் இருக்கிற குழு உறுப்பினர் ஒவ்வொருவரிடமும் தருவதற்கென்று ஏதோவொன்று பிரத்தியேகமாக இருக்கிறது. அது ஒரு தனித்துவமான திறமையாக இருக்கலாம், நன்கு-வளர்த்திட்ட ஒரு திறமையாக இருக்கலாம், அல்லது அது வேலையை எளிமையாகச் செய்து முடிப்பதற்கானதோர் ஈடு இணையற்ற ஆக்கத்திறனாக இருக்கலாம். நமது திறன்கள் வெகுவாக மாறுபட்டாலும், நாம் நமது முக்கிய மதிப்பீடுகளுக்கானதோர் பொதுவான அர்ப்பணிப்பையே பகிர்ந்துக் கொள்கிறோம்.

நாம் ஒவ்வொருவரும் எவ்விதமாக நமது முக்கிய மதிப்பீடுகளை பழக்கத்திற்குக் கொண்டு வர முடியும் என்பதையே நமது விதிகள் காண்பிக்கின்றன. இதனை நீங்கள், சாலை விதிகளை கற்கவும், பார்வைக்கு மறைவான பகுதிகளைக் கடந்து செல்லவும், மற்றவர்களை எவ்விதம் கவனித்துச் செல்வது என்பது குறித்த தெளிவைப் பெறவும் உபயோகித்துக் கொள்ளலாம். இவ்வகையில் தான், நாம் ஒருவரையொருவரையும், நிறுவனத்தையும் பாதுகாக்கிறோம்.

இவ்விதி உங்கள் வழிகாட்டியாகவே இங்கிருக்கிறது என்கிற போதிலும் கூட, Tenneco-வில் நீங்கள் பணியாற்றும் போது, உங்களுக்கு எழுகிற ஒவ்வொரு கேள்விக்கும் இது பதிலளிக்காது என்பதை மனதில் கொள்ளுங்கள். எந்த ஆவணத்தாலும் அதைச் செய்திட முடியாது. ஆனால், எது சரியோ அதைச் செய்ய உங்களுக்குத் தேவையான கோட்பாடுகள் மற்றும் ஆதார வளங்கள் நோக்கிய திசையில் இது உங்களை முடுக்கி விட்டிடும். ஆகவே, நல்ல முடிவைக் கையாளுங்கள், அதோடு உங்களுக்கு உதவி தேவையாகும் போது, உரியவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

இவ்விதிகளைப் புரிந்து கொள்வது, நமது அடுத்த பயணத்திற்கு இணைந்து செல்ல உங்களைத் தயாராக்கும். இது, எது மிக முக்கியம் என்பதைக் கற்றுக்கொள்ள உங்களுக்கு உதவி, எது சரியோ அதைச் செய்வதில் நீங்கள் எப்போதுமே திடமாக நிற்கிறீர்கள் என்பதை உறுதி செய்திடும்.

## நமது விதிகளுக்கு எவரெவர் இணங்கி நடந்திட வேண்டும்?

நீங்கள் தான். இவ்விதிகள், நமது நிறுவனத்தின் ஒவ்வொரு நிலையிலும் உள்ள, ஒவ்வொருவருக்கும் பொருந்துகிறது, இதில், நமது அதிகாரிகள், இயக்குநர் வாரியம், மற்றும் நம் சார்பாக பணியாற்றுகிற அல்லது நம்மோடு தொழில் செய்கிற ஒவ்வொரு ஆள் மற்றும் ஸ்தாபனமும் அடங்குகிறது.



இவ்விதிகளுக்குக் கூடுதலாக, கணக்கியல் மற்றும் நிதிசார்ந்த அறிக்கைகளைத் தருவதற்குப் பொறுப்பான நமது CEO, CFO, மற்றும் ஒருசில மற்ற தனிநபர்கள், நமது, நிதி மேலாளர்களுக்கான நடத்தை விதிகளையும் கடைப்பிடிக்க வேண்டும். நமது பொது வர்த்தகதுணை நிறுவனங்களுக்கும் இதர உள்ளூர் தேவைகள் இருக்கலாம்.

## நாம் நமது விதிகளைப் பின்பற்றவில்லை என்றால் என்னவாகும்?

நாம் நமது முக்கிய மதிப்பீடுகள் அல்லது நமது விதிகளைப் பின்பற்றாத போது, நாம் ஒருவர் மற்றவரின் நம்பிக்கையை, நமது முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் மற்றவர்களின் நம்பிக்கையை இழந்து விடக் கூடும். அது நமது பிராண்டுகளையும் பாதித்து விடலாம். அதனால் தான் விதிகளை மீறுவது, உங்கள் உரிமம் அல்லது வேலையை இழந்து போதல், உங்கள் செயல்திறன் மறுஆய்வினைப் பாதித்தல் அல்லது அபராதங்கள் மற்றும் சிறைத் தண்டனை போன்ற கடுமையான விளைவுகளுக்கு வழிவகுத்து விடலாம். இதைத் தவிர்ப்பதற்கு நாம் இணைந்து பணியாற்றுவோம் வாரீர். இயக்குநர்கள் வாரியம் மட்டுமே நமது விதிகளில் செய்யும் மாற்றத்தை அங்கீகரிக்கலாம் அல்லது தேவை ஒன்றுக்கு விலக்களிக்கலாம்.


## நமது விதிகளில் அடங்கியிருப்பது என்ன?

குழு உறுப்பினர்கள் மற்றும் மற்ற தரப்பினர்களைப் பொருத்த வரையில் – நம்முடன் பணியாற்றுபவர்கள், நமக்காக அல்லது நமது சார்பாக பணியாற்றுபவர்கள் உட்பட – நீங்கள் இவற்றை எவ்விதம் செய்யலாம் என்பதைக் காணலாம்:


- நமது விதிகள், நமது கொள்கைகள், மற்றும் சட்டத்தை எவ்விதம் பின்பற்றுவது.
- நல்ல முடிவையும், பொது அறிவையும் எவ்விதம் உபயோகிப்பது.
- நிழல் பகுதிகள் மற்றும் மறைவுப் பகுதிகளில் எவ்விதம் வழிகண்டு செல்வது.
- தவறான நடத்தையை நீங்கள் காணும் போது அல்லது அது குறித்த சந்தேகம் எழும் போது வெளிப்படையாக எவ்விதம் பேசுவது.
- விசாரணைகளில் எவ்விதம் ஒத்துழைப்பது.
- என்ன செய்வது என்பது உங்களுக்குத் தெரியாத போது, கேள்விகளைக் கேட்பது.

நீங்கள் ஒரு மேலாளராக இருக்கிற பட்சத்தில், நீங்கள் பின்வரும் விதத்தில் முன்மாதிரியாகவும் நடந்து கொள்ள வேண்டும்:

- உரிய முறையிலும், இவ்விதிகளை அனுசரிக்கிற விதங்களில் செயல்படுவதன் மூலம்
- குழு உறுப்பினரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விதத்தில் இருப்பதன் மூலம்
- புதியதும், புதுமையானதுமான யோசனைகளைப் பகிர்ந்து கொள்ளுமாறு உங்கள் குழுவினரை ஊக்குவிப்பதன் மூலம்
- உங்கள் குழுவுடன் முக்கிய மதிப்பீடுகளைப் பற்றி விவாதிக்கிறது
- இவ்விதிகளை உங்கள் குழுவினர் புரிந்து கொள்கிறார்கள் என்பதை உறுதி செய்வதன் மூலம்
- நமக்குக் கிடைக்கும் பலன்களைப் போலவே அதேயளவிற்கு நமது முக்கிய மதிப்பீடுகளும் முக்கியமானவை என்பதைத் தெளிவாக்கும் விதங்களில் குழு உறுப்பினரின் செயல்திறனை மதிப்பாய்வு செய்வதன் மூலம்
- நடந்திருக்க வாய்ப்புள்ள தவறான நடத்தையை அறிவித்தல் மற்றும் உங்களது குழுவினர் அல்லது மற்றவர்கள் எழுப்புகிற தவறான நடத்தை குறித்த அறிக்கைகளை மேலெடுத்துச் செல்லுதல் மூலம்
- நல் நம்பிக்கையில் ஒருவர் அறிவிக்கும் ஐயம் ஒன்றுக்கு எதிராக பழிவாங்கும் செயல் நடைபெறாமல் தடுக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமாக
- ஒருவர் நமது விதிகளை மீறியிருக்கும் போது, அதில் ஆபத்தைக் குறைப்பதற்கும், கட்டுப்பாடுகளைத் தோற்றுவிப்பதற்குமான செயல்திறன் குறிக்கோள்கள் உள்ளிட்ட, உரிய நடவடிக்கை எடுக்கப்பெறுவதைப் பரிசீலிப்பதன் மூலம்
- மனிதவளம், சட்டத்துறை அல்லது உள்ளான தணிக்கையோடு, உரியபடி ஒத்துழைப்பதன் மூலம்



## Tenneco GPS



### இது, நாம் சரியான சாலையைக் கண்டுகொள்கிறோம் என்பதை உறுதி செய்வதற்கான நமது தெரிவுகளுக்கு நம்மைக் கொண்டு செல்கிறது.

நீங்கள் எப்போதாவது செய்வதறியாது தவித்து, நடவடிக்கை எடுப்பதற்கான மிகச் சிறந்த வழியைத் தேடும் போது, உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்:

**அது சட்டபூர்வமானது தானா?**

↓

**அது நம்முடைய விதிகள் மற்றும் நமது கொள்கைகளோடு இசைந்ததா?**

↓

**அது நமது நோக்கம் மற்றும் முக்கிய மதிப்பீடுகளுக்குத் துணைபுரிகிறதா?**

↓

**அது, நமது வாடிக்கையாளர்கள், நமது குழு உறுப்பினர்கள், பங்குதாரர்கள், சமுதாயங்கள், மற்றும் நம்மோடு, நமக்காக மற்றும் நம் சார்பாக பணியாற்றுபவர்களுக்கு நாம் கொடுத்துள்ள வாக்குறுதிக்கு இசைந்ததா?**

↓

**நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை ஊடகத்தில் வெளிவந்தால் அது உங்களுக்கு சௌகரியமாக இருக்குமா?**

↓

இக்கேள்விகள் அனைத்திற்கும் நீங்கள் ஆம் என்று பதிலளித்தால், ஒருவேளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அது சரியானதாக இருக்கும். ஆனால், எந்த நிலையிலும் நீங்கள் "இல்லை" அல்லது "எனக்கு உறுதிபடத் தெரியவில்லை" என்பதாகப் பதிலளித்தால், நிறுத்தி விட்டு, மனம் திறந்து பேசி, கேட்டுத் தெரிந்து கொண்டு, மறுபரிசீலனை செய்யுங்கள். நாம் எப்போதும் நாணயத்துடன் செயல்படுகிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

என்ன செய்வது என உங்களுக்கு உறுதிபடத் தெரியவில்லை என்கிற பட்சத்தில், உங்களுக்கு உதவ அநேக ஆதார வளங்கள் இருக்கின்றன என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் தன்னந்தனியாக ஒரு கடினமான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியதில்லை.

# வழிகாட்டுதல்களுக்காகக் கேட்டல்

## மனம் திறந்து பேசுதல்

நமது விதிகள், நமது கொள்கைகள், அல்லது சட்டத்தை மீறுவது, Tenneco நிறுவனத்தையும், நமது குழு உறுப்பினர்களையும் பாதித்து விடலாம். நீங்கள் முறையற்ற ஒன்றை எப்போதாவது பார்த்தாலோ அல்லது நடந்திருக்கலாம் எனச் சந்தேகித்தாலோ, மனம் திறந்து பேசுங்கள். உங்களுக்கு உறுதிபடத் தெரியவில்லை என்றாலும் கூட, மனம் திறந்து பேசிவிடுவது தான் எப்போதுமே செய்வதற்கான சரியான காரியமாகும்.



### எப்போது மனம் திறந்து பேசுவது

நீங்கள் பின்வருவனவற்றின் விதிமீறல் ஒன்றைப் பார்க்கும் பட்சத்தில் அல்லது சந்தேகிக்கும் பட்சத்தில்:

- நமது முக்கிய மதிப்பீடுகள் அல்லது விதிகள்
- நமது கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்
- எந்தவொரு சட்டம் அல்லது ஒழுங்குமுறை

### எப்படி மனம் திறந்து பேசுவது

இவர்களைத் தொடர்புகொள்ளத் தயங்காதீர்கள்:

- உங்கள் மேலாளர்
- நீங்கள் நம்புகிற இன்னொரு மேலாளர்
- மனித வளங்கள் துறை
- சட்டத் துறை
- நிதித்துறை
- உலகளாவிய இணக்கத்துறை

இதற்குக் கூடுதலாக, Tenneco Hotline வசதி, நாளில் 24 மணி நேரமும், வாரத்தில் ஏழு நாட்களும் தொலைபேசி அல்லது இணைய வாயிலாகக் கிடைக்கிறது. இதற்கான கட்டணமில்லா தொலைபேசி எண்களை எங்களது இணையதளத்தில்பட்டியலிட்டுள்ளோம்.

Tenneco Hotline-க்கு வரும் தொலைபேசி அழைப்புகளையும், அறிவிப்புகளையும், வெளிப்புற நிறுவனம் ஒன்றே கையாளுகிறது. பெரும்பாலான நாடுகளில், நீங்கள் அனாமதேயமானவராக இருந்துகொள்வதற்கான வழிவகையும் இருக்கிறது. அதை அனுமதிக்காத சட்டம் இருக்கிற நாடுகளில், அதுகுறித்து Hotline பிரதிநிதிகள் உங்களுக்குத் தெரிவிப்பார்கள். நீங்கள் இத்தகைய ஆதார வளங்களை மனம் திறந்து பேசுவதற்கு உபயோகிக்கும் போது, நீங்கள் அறிவித்ததன் நிலையைத் தெரிந்து கொள்ள அல்லது கூடுதல் தகவல்களைப் பெறுவதற்கு உங்களுக்கு ஒரு அறிக்கை எண் வரும்.

Hotline வாயிலாக அறிவித்த அனைத்துப் பிரச்சினைகளையும், தலைமை Ethics & Compliance அதிகாரி அவர்களுக்கு அனுப்பி வைத்து விடுவார்கள், அதோடு உங்களது விசாரணைகளுக்கும் உரிய நேரத்தில் பதில் தருவார்கள் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். Tenneco-வில், நடந்திருக்க வாய்ப்புள்ள தவறான நடத்தைகள் குறித்த அனைத்து அறிவிப்புகளையும் தீவிரமானவையாகவே எடுத்துக் கொள்வோம். அறிவிப்பு ஒன்று எங்களுக்கு வந்ததும், அந்த விஷயத்தை நாங்கள் இரகசியமாக விசாரணை செய்து, நமது முக்கிய மதிப்பீடுகள், விதிகள், கொள்கைகள் அல்லது பொருத்தமான சட்டங்களை மீறியிருக்கிறார்களா என்பது குறித்து முடிவெடுத்து, உரிய நேரத்திலும், முழுமையாகவும் ஏற்ற திருத்த நடவடிக்கைகளை எடுப்போம். Tenneco நிறுவனக் குழு உறுப்பினர்கள் விசாரணைகளில் ஒத்துழைக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறோம்.

## பழிவாங்காமை

Tenneco-வில், அக்கறையோடு ஐயங்களைப் பகிர்ந்து கொள்கிற, விசாரணைகளில் ஒத்துழைக்கிற அல்லது நேர்மையான அறிக்கைகளைத் தருகிறவர்களுக்கு எதிராக, நாங்கள் எவ்விதப் பழிவாங்குதல் நடவடிக்கையையும் (வேலை நீக்கம் செய்தல், சம்பளக் குறைப்பு, அல்லது மற்ற எதிர்மறையான வேலை நடவடிக்கை போன்றவை) அனுமதிப்பதில்லை.

ஒரு நேர்மையான அறிக்கை என்றால் என்ன? இது, நீங்கள் உண்மையில் நம்புகிற ஒன்று நமது விதிகளின், அதை நீங்கள் தவறாக எடுத்திருந்தாலும் கூட, நமது கொள்கைகளின், அல்லது சட்டத்தின் மீறலாக இருக்கலாம் என்பது குறித்து மனம் திறந்து பேசுவதேயாகும்.

உங்கள் சந்தேகம் உண்மையென நிரூபிக்கிறார்களோ இல்லையோ, அவற்றை தீவிரமானதாகவே எடுத்துக் கொள்வோம், அதோடு முன்வரும் போது உங்களுக்குப் பாதுகாப்பளிப்போம். உங்கள் குரலை நாங்கள் மதிக்கிறோம் அதோடு கூடுமான மட்டும் அதிக விவரங்களோடு மனம் திறந்து பேசும்படி உங்களை ஊக்குவிக்கிறோம். நீங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகத் தகவல்களைத் தருகிறீர்களோ, அந்தளவிற்கு எங்களால் உடனே அப்பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும்.

ஆகவே, மனம் திறந்து பேசுங்கள், நம்மை ஒட்டுநர் இருக்கையில் இருக்கச் செய்கிற நம்பிக்கை மற்றும் புகழைப் பராமரிக்க உதவுவதில் நீங்கள் உதவுகிறீர்கள் என்பதைத் தெரிந்து நிம்மதியாயிருங்கள்.



# ஒன்றாக வெற்றியடைதல்

Tenneco-வில், நாம் ஒரு குழுவினராக இருக்கிறோம். உற்பத்தி செய்வதில் இருந்து வினியோகம் செய்வது வரை ஒவ்வொன்றிலும் நிபுணர்களாக, நாம் தகவல்களுக்கும், ஆதார வளங்களுக்கும் ஒருவரையொருவர் சார்ந்திருக்கிறோம். நாம் அப்படிச் செய்யும் போது, நாம் உள்ளபடி எந்தளவிற்கு திறமையுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்வோம். ஒருவரையொருவர் கவனித்துக் கொள்வதன் மூலமும், வேறுபாடுகளைத் தழுவிக்கொள்வதன் மூலமும், நாம் வெற்றிபெறுவோம், அதோடு அதை நாம் ஒன்றிணைந்து செய்வோம்.

## இந்தப் பிரிவில்:

- ஒருவரையொருவர் மதித்தல்
- அனைவரும் ஒன்றாக இருத்தல்
- பாதுகாப்பை முதன்மை ஆக்குதல்
- இதர தரப்பினருடன் பணிபுரிதல்

# ஒருவரையொருவர் மதித்தல்

## இலக்கு

கூட்டுமுயற்சி மற்றும் உள்ளடக்கிய, தொல்லையற்ற, ஒடுக்குதலற்ற மற்றும் இழிவுபடுத்தாத பணிச்சூழலை ஊக்கப்படுத்துதல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

நமது குழுவில் உள்ள ஒவ்வொருவரையும் நாம் மதிக்கிறோம், ஒவ்வொரும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டியது அவசியம் என்பதை நாம் அறிவோம். அதனால் தான் நாம் ஒவ்வொருவரும், நமது நிறுவனத்தில் உள்ள ஒவ்வொரு நிலையிலும், நாம் இயங்கும் ஒவ்வொரு இடத்திலும், தொல்லை கொடுப்பதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் கடமையை கொண்டுள்ளோம்.

நம் ஒவ்வொருவரையும் மதித்து இதனை செய்கிறோம். நாம்செய்யும் அனைத்தும் நம்பிக்கையுடன் தொடங்கி முடிவுறுகிறது. மக்கள் சரியானவற்றை செய்கிறார்கள் என்று நாம் நம்புகிறோம், ஒருவரை ஒருவர் அக்கறை கொள்கிறார்கள், நேர்மறையான சூழலை ஏற்படுத்த பாடுபடுகிறார்கள் என்று நம்புகிறோம். அங்கே நம் உறுப்பினர்கள் தொந்தரவு பயமின்றி தங்கள் பணியை ஆற்ற முடியும். நம்மால் தொல்லையை அடையாளம் காணமுடியும் என்பதை நாம் உறுதி செய்கிறோம். அப்படி எதையும் கண்டால் அதுபற்றி தெரிவிக்கலாம்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

ஈடுபாடு காட்டுதல். *குழு உறுப்பினர் ஒருவர் மற்றவருடைய மதத்தை இழிவு படுத்துவதை நீங்கள் கேட்க நேரிடுகிறது. அவர்களை நிறுத்தச் சொல்லிவிட்டு, அவர்கள் நடத்தை குறித்து தெரிவிக்கிறீர்கள். எல்லை மீறல்?* இல்லை, நாம் ஒரு குழு. மற்றவர்களின் மத நம்பிக்கையை நாம் மதிக்கிறோம், எனவே நீங்கள் குரல் எழுப்பியதன் மூலம் சரியாக செய்திருக்கிறீர்கள். இதுபோன்ற மரியாதைக்குறைவான மற்றும் பொருத்தமற்ற செயலை நீங்கள் காணும்போதெல்லாம் இதனை செய்யுங்கள், அல்லது நீங்கள், வன்முறை, மிரட்டல், இழிவு படுத்துதல், தொந்தரவுசெய்தல் இவற்றை எதிர்கொள்ளும்போதெல்லாம் இதைச் செய்யுங்கள்.

### எச்சரிக்கை.

தொழில்முறைத்திறனுடன் வைத்திருத்தல். *குழு உறுப்பினர் ஒருவரின் பதவி உயர்வு பற்றி நீங்கள் இப்போதுதான் அறிந்தீர்கள். அவரது பதவி உயர்வுக்கு நீங்கள் மகிழ்ச்சி அடைகிறீர்கள். அவரை பாராட்டி அவர் முதுகில் தட்டிக்கொடுக்க விரும்புகிறீர்கள். அனுமதிக்கப்படுகிறதா?* ஒருவேளை, ஆனால் உங்கள் பகுதியில் நிலவும் வழக்கம், மரபை பொருத்தது. இதுபோன்ற தொடுதலை வரவேற்பதில்லை என்று நீங்கள் அறிந்தால், உங்கள் சக ஊழியரை பாராட்ட வேறு வழியை கண்டறியுங்கள்.

> நாம் வெற்றி பெற சிறந்த வாய்ப்பினை உறுதி செய்ய திறந்த உண்மையான இருவழி தொடர்பை பயன்படுத்துகிறோம்.

### தவறான வழி.

நகைச்சுவையை சாக்காக பயன்படுத்துதல். *காலாண்டு இறுதியில் முடிவுகள் ஏமாற்றமளிப்பதாக இருப்பதால், குழுவில் மிகவும் பதட்டமான சூழல் நிலவுகிறது. பதட்டத்தை தணிக்க, நகைச்சுவையான மீம் ஒன்றை அனைவரிடமும் காட்ட விரும்புகிறீர்கள். ஆனால் அதில் உள்ள படம், சாடையாக வேறு ... எதையோ உணர்த்துகிறது. ஹே- நாமெல்லாம் பெரியவர்கள், சரிதானே?* இதை ஒரு சாக்காக பயன்படுத்தாதீர்கள். பொருத்தமற்ற ஆபாசமான படங்களை பகிர்ந்து கொள்ளுதல் ஒருவகை பாலியல் தொந்தரவு. நாம் இதை சகித்துக்கொள்வதில்லை. **எந்த ஒரு** செயலோ, வார்த்தைகளோ, ஆபாச பொருளில் இருந்து, யாருக்கேனும், அசவுகரியமான வகையில், அவர்கள் பணியாற்றுவதில் பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் இருந்தால். பகிர்ந்துகொள்ள பொருத்தமுள்ள வேறு எதையாவது கண்டறியுங்கள்.

## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### “தொந்தரவு” எப்படி இருக்கும்?

தொந்தரவு வரவேற்கப்படாத நடத்தையாகும். அது பணியிடத்தை, விரோதமான இடமாக அல்லது அச்சுறுத்தும் இடமாக உணரவைக்க கூடம். மாறாக நாம், நம்பிக்கைக்குரிய கலாசாரத்தை, ஒருவருக்கு ஒருவர் அக்கறை கொள்ளும் இடமாக உருவாக்க விரும்புகிறோம். எந்த வகை தொந்தரவையும் தவிர்த்து உங்கள் பங்களிப்பை செய்யுங்கள். இதில்:

- வாய்மொழி
  - கிறுக்குத்தனமான அல்லது கீழ்த்தரமான நகைச்சுவைகள்
  - இனரீதியான தாக்குதல்
  - மிரட்டல்கள்
  - பெயரிட்டு இழிவுபடுத்துதல்
  - கொச்சையான கருத்து
- உடல் ரீதியான
  - தள்ளுதல் அல்லது சொருகுதல்
  - மற்றவர் உடல் மீது உரசுதல்
  - பாலியல் ரீதியாக முன்மொழிதல்
- காணொளி
  - புண்படுத்தும் கேலிச்சித்திரம்
  - புண்படுத்தும் மின்னஞ்சல்கள்
  - சித்திரங்கள் அல்லது படங்கள்
  - தவறான அல்லது ஆபாசமாக முறைத்தல் அல்லது செய்கைகள்
- பாகுபாடு
  - தனிப்பட்ட குணாதிசியத்தின் அடிப்படையில், ஆனால் பாலின மற்றும் இன ரீதியாக மட்டுமல்லாமல்

நினைவில் கொள்ளுங்கள், தவறான நடத்தை என்பது, நமது விதிமுறைகளை மீறுவதற்கு இந்த பட்டியலில் உள்ளவை மட்டும் மீறப்படுவதுடன் நிற்பதில்லை. ஒருவரை ஒருவர் மதித்தல், ஒருவருடைய உணர்வுகளை மற்றவர்கள் பரிவு காட்டுதல் மிகவும் முக்கியமானது என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் செயல் ஏற்படுத்தும் விளைவுகள் தான் இதில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். “நான் அந்த பொருளில் சொல்லவில்லை” என்று சொல்வதால் சரியாகாது.



மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்

# அனைவரும் ஒன்றாக இருத்தல்

## இலக்கு

ஒவ்வொருவரும், தங்களையும் சேர்த்துள்ளதாகவும், அவர்களது முழு சுயத்தையும் பணிக்காகக் கொண்டு வர ஊக்கம் பெற்றதாகவும் உணர்கிறதோர் சூழலை அபிவிருத்தி செய்தல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

Tenneco-வில், எல்லா விதத்திலும் வருகிற உன்னத நிலையையே நாம் நாடுகிறோம். வேறுபாடுகள் நிறைந்த பின்னனியைக் கொண்ட திறமை வாய்ந்த குழு ஒன்று நம்மிடம் இருக்கப் பெற நாம் அதிர்ஷ்டசாலிகள் தான் எனும் அதே வேளையில், அங்கேயே நாம் நின்று போவதில்லை. நாங்கள், நமது குழுவில் இருக்கிற ஒவ்வொருவரும், மதிக்கப்படுவதாகவும், சேர்த்துக்கொள்ளப்பட்டதாகவும், மரியாதையளிக்கப்படுவதாகவும் உணர்கிற நிலைக்கே குறிக்கோள் கொள்கிறோம்.

நமது மிகப்பெரிய சொத்தே நமது ஆட்கள் தான். அனைத்தும் சேர்ந்த தன்மையையும், வேற்றுமையையும் அபிவிருத்தி செய்வதன் மூலமாகவும், நியாயமான வேலை வாய்ப்புப் பழக்கங்களைக் கண்காணிப்பதன் மூலமாகவும், பாகுபாடு காண்பிக்கப்பெறுவதை ஒருபோதும் சகித்துக் கொள்ளாததன் மூலமாகவும் நாம் அவர்களைப் பாதுகாக்கிறோம். வேற்றுமைகளைக் கொண்டாடுவதன் மூலமாகவும், உங்களைச் சுற்றியுள்ளவர்கள் அவர்களால் முடிந்த மட்டும் மிகச் சிறப்பாகச் செயல்பட அவர்களைக் கவர்ந்திழுப்பதன் மூலமாகவும், ஒவ்வொருவருக்கும் சமமான வாய்ப்பைக் கொடுத்திட எங்களுக்கு உதவுங்கள்.

**நாங்கள் எல்லா விதங்களிலுமான வேற்றுமைக்கு மதிப்பளிக்கிறோம், அதில் அடங்குபவை:** வயது, பாரம்பரியம், வம்சாவழி அல்லது குடியுரிமை, நிறம், இனம், மதம் (மத உடை மற்றும் பேணும் பழக்கங்கள்), பூர்வீகம், ஊனம், திருமண அல்லது குடும்ப நிலை, மருத்துவ நிலைமை, மரபியல் தகவல்கள், இராணுவ மற்றும் முன்னாள் இராணுவ நிலை, அரசியல் சார்பு, தேசிய மூலம் (மொழி-உபயோகக் கட்டுப்பாடுகள் உட்பட), பாலினம் (கர்ப்பம், மகப்பேறு, தாய்ப்பால் கொடுத்தல் மற்றும் அது தொடர்புடைய நிலைமைகள் உட்பட), பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடு, பாலியல் சார்பு, மற்றும் இன்னும் பல.

> நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் உள்சேர்ப்பு இருப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

## நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

சமமான வாய்ப்பினை ஊக்குவித்தல். *பாலினம் மாறுவது என்று ஒருவர் எடுத்த முடிவால் அவரை ஒரு திட்டத்திற்கு நிராகரித்திருக்கிறார்கள் என்பதாக உங்கள் குழு நம்புகிறது. அவர்கள் உதவிக்காக உங்களிடம் வருகிறார்கள். சரியான தெரிவா?* நிச்சயமாக. வேலை வாய்ப்பு குறித்த முடிவுகள், பாலின வெளிபாடுகளை கருத்தில் கொள்ளாமல், வேலை தொடர்பான வரண்முறை அடிப்படையிலேயே இருக்க வேண்டும். மனம் திறந்து பேசுவதன் மூலமாக, உங்கள் குழு ஒரு நியாயமான, பன்முகத் தன்மை கொண்ட, வரவேற்பளிக்கக் கூடிய பணியிடத்தைப் பராமரிக்க உதவுகிறது. நீங்களும், அவர்களது பாலினம் மாறுவது என்ற முடிவிற்கு நாம் துணை நிற்கிறோம் என்பதை அவருக்கு எவ்விதம் தெரியச் செய்ய முடியும் என்பது குறித்த உரையாடலுக்கு சில யோசனைகளைக் கொடுங்கள். உரையாடலை தொடரச் செய்வதன் மூலமாக, உங்களது குழுவினரால் அதி விரைவாக யோசனைகளைச் செயல்படுத்திவிட முடியும்.

## எச்சரிக்கை.

சுயவுணர்வோடு பணியாற்றுதல். *உங்கள் குழுவினர், சமமான தகுதியுள்ள இருவரை நேர்காணல் செய்கிறார்கள். அவர்களில் ஒருவர் வேற்றுமையுள்ளவர். குழுவில் உள்ள ஒருவர், சிறந்த ஆளுமை கொண்ட ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம், அவரே நன்கு பொருத்தமானவராக இருப்பார் என்று ஆலோசனையளிக்கிறார். அருமையான முடிவு?* உண்மையாகவே இல்லை. மறைமுகமாக ஒருதலைப்பட்சமாக முடிவெடுப்பது, உங்களைத் தவறான திசைக்குக் கொண்டு சென்றுவிடும். சிறந்த எதிர்காலத்தை அமைப்பதற்கு வேற்றுமை எவ்விதமாக உங்கள் குழுவை வலுப்படுத்தும் என்பது குறித்து விவாதிப்பதே சிறப்பானதாக இருக்கும்.

## தவறான வழி.

அவமரியாதை செய்பவராக இருத்தல். *ஒருவரது நாட்டினம் குறித்து உங்கள் மேலாளர் கிண்டல் செய்கிறார். அந்நேரத்தில் யாரும் எதுவும் சொல்லவில்லை, ஆனால் பிற்பாடோ, அது எவ்வளவு முறையற்றது என்பது குறித்து ஒவ்வொருவரும் முனுமுனுக்கிறார்கள். குறைந்த பட்சம், நீங்கள் அனைவரும் ஒரே பக்கத்தில் இருக்கிறீர்கள், சரி தானே?* தவறு. Tenneco-வில் இத்தகைய விமர்சனங்களுக்கு இடம் கிடையாது. மனம் திறந்து பேசுங்கள், அதற்காக உங்களைப் பழிவாங்கினால் உங்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.




## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### மேலும் உள்ளடக்கியதாக வழிகளை காண்கிறீர்களா?

- உங்கள் தனிப்பட்ட பண்புகளைப் பற்றி பேசுங்கள்.- மற்றவர்கள் அதை பின்பற்ற ஊக்கமளிப்பதாக இருக்கலாம்.
- கடினமான உரையாடல்களில் பங்கேற்க கூச்சப்படாதீர்கள், ஆனால், என்னவென்ற பாருங்கள், காது கொடுத்து கேளுங்கள், மாற்றுக் கருத்துகளை மதியுங்கள்.
- மற்றவர்கள் அனுபவத்தில் இருந்து நீங்கள் மேலும் கற்றுக்கொள்ள உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள ஒருபோதும் அஞ்சாதீர்கள்.
- மக்கள் தாங்கள் எப்படி உள்ளார்கள் என்று மற்றவர்கள் கருதுகிறார்கள் என்று நினைக்கிறார்களோ அந்த வகையில் பேசுங்கள் செயல்படுங்கள்.
- வேலைவாய்ப்பளித்தல் தொடர்புடைய முடிவுகளை எடுப்பதில் பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தை எப்போதுமே கருத்தில் கொள்ளுங்கள்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்

# பாதுகாப்பை முதன்மை ஆக்குதல்

## இலக்கு

நாம் பாதுகாப்பாக இருப்பதை உணரவும், ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்ளக்கூடியதுமானதோர் சூழலையும் உருவாக்குதல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

நமது கலாச்சாரத்தில் பாதுகாப்பு என்பது மிகப் பெரிய பங்காகும், நாம் ஒவ்வொருவரும் அதில் முக்கிய பங்காற்றுகிறோம். ஒவ்வொருவரும் பாதுகாப்பாக இருப்பதை உணரச் செய்யும் வகையில், கொள்கைகள் மற்றும் வழிமுறைகள், ஆய்வுகள் மற்றும் சரிபார்ப்புப் பட்டியல், பாதுகாப்புக் குழுக்கள் மற்றும் பாதுகாப்புப் பயிற்சி வாயிலாக நாங்கள் கடுமையாக உழைக்கிறோம்.

இதில் வெற்றி பெறுவதற்கு, எங்களுக்கு உங்களின் உதவி தேவை. விழிப்புடன் இருங்கள், பாதுகாப்பான பணி நடைமுறைக்கு முன்மாதிரியாக இருந்து, ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்ளுங்கள்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

தகவல் தெரிந்து இருத்தல். *நீங்கள் பணிபுரியும் இடத்தில் புதிய அபாயக் அடையாளக் குறி இருப்பதைப் பார்க்கிறீர்கள், ஆகவே அதைப் பரிச்சயப்படுத்திக் கொள்வதற்கு நீங்கள் அவகாசம் எடுத்துக் கொள்கிறீர்கள். நல்ல யோசனை?* உள்ளபடியே! தகவல் தெரிந்திருப்பது என்பது, பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான அற்புதமானதோர் வழி. ஏற்பட வாய்ப்பிருக்கிற இன்னல்களை கவனித்துப் பாருங்கள், பாதுகாப்புத் தேவைகள் குறித்து நாளது தேதி வரை விவரம் தெரிந்து இருங்கள், அதோடு, நிகழ்வுகள், காயங்கள், மயிரிழையில் தப்பியவை, மற்றும் பாதுகாப்பற்ற சூழல்களை உடனடியாக தெரிவியுங்கள்.

உங்கள் இடைவெளியைக் கடைபிடித்தல். *உங்களது பகுதி தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது, ஒவ்வொருவரையும் வீட்டிலிருந்தே பணியாற்றுமாரு சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், உங்களுக்கு, நேரடியாக களத்தில் பணியாற்றியாக வேண்டிய அத்தியாவசிய வேலை இருக்கிறது, ஆகவே அங்கே செல்ல உங்கள் மேலாளரிடம் அனுமதி பெறுகிறீர்கள். அங்கே இருக்கும் வேளையில், மற்றவர்களிடமிருந்து இடைவெளியைக் கடைபிடியுங்கள், அடிக்கடி உங்கள் கைகளைக் கழுவிக் கொள்ளுங்கள், அதோடு அதிகம் தொடும் இடங்களைக் கிருமி நீக்கம் செய்யுங்கள். புத்திசாலித்தனமான தெரிவுகள் தானே?* ஆம். தனிமைப்படுத்தல் சமயத்திலும் கூட, நீங்கள் பணிக்கு வர வேண்டிய சமயங்கள் இருக்கலாம். அது போன்ற நிகழ்வுகளில், பாதுகாப்பாக இருந்துகொள்ள ஆரோக்கியமான பழக்க வழக்கங்களைக் கடைபிடியுங்கள்.

### எச்சரிக்கை.

பணிக்கு தகுதியுடையவராகுதல். *நீங்கள் ஒற்றைத் தலைவலிக்காக மருத்துவர் பரிந்துரைத்த மருந்து ஒன்றை எடுத்துக் கொண்டீர்கள். பணிக்கு வருவது சரியா?* இருக்கலாம். இப்போதும் உங்களால் பாதுகாப்பாக பணியாற்ற இயலும் என உங்கள் மருத்துவர் சொல்லி விடுகிறார் என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள். சில நேரங்களில் **மருத்துவர் பரிந்துரைக்கிற** மருந்துகள் நிதானிப்பில் பாதிப்பை ஏற்படுத்தலாம். இதில் **சட்டவிரோத** மருந்துகள், **பொழுதுபோக்கு போதை** மருந்துகள் மற்றும் சாராயம் ஆகியவற்றைப் பணியிடத்தில் பயன்படுத்துவது, ஒவ்வொருவரையும் ஆபத்தில் கொண்டுபோய் வைக்கிறது. நாம் இத்தகைய போதைப் பொருட்களை நமது பணியிடத்தில் இல்லாமல் பார்த்துக் கொள்வோம்.

### தவறான வழி.

அச்சுறுதல்களை அலட்சியப்படுத்தல். *உங்களது முதலாளியை அறைய வேண்டும் என குழு உறுப்பினர் ஒருவர் சொல்கிறார். அவரது கோபம் தணிந்துவிடும் என நினைத்து, அதை அலட்சியமாக எடுத்துக் கொள்கிறீர்கள். பெரிய விஷயமில்லை, இல்லையா?* தவறு. எப்போதுமே, வன்முறைக்கான எந்த அச்சுறுத்தலும் இருக்கிறதா எனப் பார்த்து – அதை அறிவித்திட வேண்டும். நாம் ஒரு குழு. நாம் ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்வோமாக.

> எப்படி நாம் செயல்களில் ஈடுபடுகிறோம் என்பது நாம் வெற்றி பெற இன்றியமையாதது என்பதைப்போல் என்ன செய்கிறோம் என்பது.

## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### பணியிட வன்முறையை நான் எவ்வாறு எதிர்கொள்கிறேன்?

யாராவது வன்முறையாளரா என்று முன்கூட்டியே கணிப்பது மிகவும் சிரமம். ஆனால், கூடுதல் தகவல்களை வழங்குவதன் மூலம் இதற்கு உதவ முடியும். யாரேனும் ஒருமுறைக்கு மேல் எச்சரிக்கை குறியீடுகளை தென்படுத்தினாலோ, யாருடைய நடவடிக்கையிலாவது மாற்றம் ஏற்பட்டுள்ளதாக நீங்கள் உணர்ந்தாலோ உடனடியாக மேலாளரிடம் இதுபற்றி பேசுங்கள்.

நடத்தை மாறுபாடுகளின் உதாரணங்கள்:

- தான் நியாயமற்ற முறையில் நடத்தப்படுவதாக திடீரென, தொடர்ச்சியாக புகாரளித்தால்
- மற்ற தொழிலாளர்களுடன் அல்லது நிர்வாகத்துடன் மோசமான உறவினை கொண்டிருந்தால்
- நடத்தையில் திடீரென மாற்றம் ஏற்பட்டால், மனநிலையில் திடீர் மாற்றங்கள், அல்லது தான்தோன்றித்தனமாக நடந்துகொள்ளல்
- பிறர் மீது நம்பிக்கையில்லாத நடத்தை
- எரிச்சலடைவது போன்ற வெளிப்படையான அறிகுறிகள், எரிந்து விழுதல், அலறுதல், கெட்ட வார்த்தைகளால் ஏசுதல், அல்லது மிரட்டுதல், அல்லது விவாதம் செய்தல் போன்ற அறிகுறிகள்

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்



# இதர தரப்பினருடன் பணிபுரிதல்

## இலக்கு

நமது முக்கிய மதிப்பீடுகளை பகிர்ந்துக் கொள்கிற மற்ற தரப்பினருடன் பரஸ்பர நம்பிக்கை மற்றும் மரியாதையை உருவாக்குதல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

Tenneco-வில் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் வெற்றியையே நாங்கள் எதிர்பார்க்கிறோம். நமது வெற்றியின் ஒரு முக்கியமான அங்கமே, நமது வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் மற்ற தரப்பினரோடு பரஸ்பர பயன்தரக்கூடிய கூட்டணியை வைத்திருப்பதேயாகும்.

நமக்கு நாமே உயர் நியமங்களை விதித்துக் கொள்வதைப் போல, எங்களோடு பணியாற்ற விரும்புகிறவர்களிடமும் எங்களுக்கு ஒருசில எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. ஆரோக்கியமான வாணிப உறவுகளே ஒவ்வொருக்கும் வெற்றியாக அமையும் என்பதால், நமது பேரத்தை முடிவு செய்திட நம்மால் முடிந்த மிகச் சிறந்தவற்றைச் செய்கிறோம்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

ஞானமாகத் தேர்வு செய்தல். *நீங்கள் வரவிருக்கிற திட்டம் ஒன்றுக்காக, இரு விற்பனையாளர்களில் ஒருவரை முடிவு செய்கிறீர்கள். இருவரையும் சரிபார்த்து, அவர்கள் நல்ல புகழுடையவர்கள் என்று உறுதி செய்தாயிற்று, ஆனால் அவர்களில் ஒருவர் நன்கு தெரிந்தவர், இன்னொருவர் அப்படியல்ல. நன்கு தெரிந்த விற்பனையாளரை தேர்வு செய்யலாமே என்று உங்களுக்கு ஒரு சோதனை, ஆனால் நீங்கள், தேவைகள், விலை, தரம், இருப்பு, மற்றும் சேவைகளை மதிப்பிடும்போது, குறைந்தளவிற்குத் தெரிந்த விற்பனையாளரே வலுவான தகுதிகளை பெற்றிருக்கிறார். ஆகவே, நீங்கள் குறைந்தளவிற்குத் தெரிந்த விற்பனையாளரையே தேர்வு செய்கிறீர்கள். சரியான தெரிவா?* ஆம். எப்போதுமே குறிப்புகள் மற்றும் பின்புலங்களை சரிபார்ப்பது ஒருபுறமிருக்க, நாம் உரிய கவனம் செலுத்தும் பழக்கத்தைக் கடைபிடித்திட வேண்டும், அவர்கள் நமது முக்கிய மதிப்பீடுகளை பகிர்ந்துக்கொள்கிறார்கள் என்பதை உறுதி செய்து கொண்டு, அவர்களை வெளிப்படையாகத் தெரிகிற வரன்முறை அடிப்படையில் மதிப்பாய்வு செய்திடல் வேண்டுமேயொழிய, அவர்கள் எந்தளவிற்குப் பிரபலமானவர்கள் என்பதன் அடிப்படையில் அல்ல.

ஒவ்வொருவரையும் நியாயமாக நடத்துதல். *ஆக வாய்ப்புள்ள விற்பனையாளர் ஒருவர், தொழில்முறை கால்பந்தாட்டப் போட்டிக்கான நுழைவுச் சீட்டுக்களை உங்களுக்கும், உங்கள் கூட்டாளிக்கும் அனுப்பி வைக்கிறார். அது மிதமிஞ்சியதாகத் தெரிகிறது, ஆகவே அதில் நமது கொள்கைகள் குறித்த ஒரு குறிப்பைப் பணிவோடு எழுதி வைத்துத் திருப்பி அனுப்பி விடுகிறீர்கள். சாமார்த்தியமான நடவடிக்கை?* ஆம். சாத்தியமான விற்பனையாளர் ஒருவரிடமிருந்து வருகிற பரிசு ஒன்றை ஏற்றுக் கொள்வதென்பது, நீங்கள் நிறுவனத்திற்கானதை விட்டுவிட்டு, உங்களுக்கான சிறந்ததை தேர்வு செய்கிறீர்கள் என்ற அபிப்பிராயத்தைக் கொடுத்துவிடக் கூடும். நமது கொள்கைக்கு அவசியமாகிறபடி பெறுகிற பரிசுகளை வெளியிட வேண்டும்.

### எச்சரிக்கை.

செயல்திறனைக் கண்காணித்தல். *நீங்கள் சமீபத்தில் ஒப்பந்ததாரர் ஒருவருடன் பணி செய்யத் துவங்கினீர்கள். நாம் அவர்களிடமிருந்து நமது உயர் நியமங்களைக் கடைபிடிக்கவும், திட்டத்திற்கு ஆகும் காலம் அதிகம் பிடித்தாலும் கூட, சட்டத்தைப் பின்பற்றி நடக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம் என்பதை அவர்களுக்குத் தெரியச் செய்கிறீர்கள். நீங்கள் உங்கள் கடமையைச் செய்து விட்டீர்கள், சரியா?* இது ஒரு அற்புதமான ஆரம்பமே, ஆனால் அவர்களது பணியைக் கூர்ந்து கண்காணித்திடல் வேண்டும். சந்தேகத்திற்கிடமான எந்தஒரு விலைப் பட்டியல்களையும் மறுஆய்வு செய்து, நமது முக்கிய மதிப்பீடுகளை ஆதரிக்கும் அதே வேளையில், உரிய காலத்திலும், வாக்குறுதியளித்தபடியும், அவர்கள் பொருட்களைக் கொண்டுவந்து தருகிறார்கள் என்பதை உறுதி செய்யுங்கள்.

### தவறான வழி.

அவர்களது தகவல்களைப் பாதுகாத்தல். *நமது ஒப்பந்ததாரர்களில் ஒருவர், தவறுதலாக ரகசியமான தகவல்களுடைய ஒன்றைத் தற்செயலாக மின்னஞ்சல் செய்து விடுகிறார். அது மிகவும் வளவளவென்று இருக்கிறது, பகிரக்கூடியதும் அல்ல, ஆகவே, நீங்கள் அதை உங்கள் குழு உறுப்பினருடன் உணவு இடைவேளையின் போது விவாதிக்கிறீர்கள். Tenneco-வில் உள்ள ஒருவரிடம் அதுபற்றிச் சொல்வது ஒன்றும் பெரிய பாதிப்பில்லை, சரியா?* தவறு. நமது ஒப்பந்ததாரர்கள் அவர்களது தகவல்களைக் குறித்து நம்மை நம்புகிறார்கள். உங்களிடம் தவறுதலாக ஒன்று வந்து விட்டால், அதை உடனடியாக அழித்திடுங்கள், அனுப்பியவருக்கு அவர்களது தவறைத் தெரியச் செய்து, அது குறித்து உங்களது சட்ட ஆலோசகருக்குத் தெரியப்படுத்துங்கள். இது, நாம் எப்போதுமே இரகசியத்தன்மையைக் கடைபிடிக்கிறோம் என்ற செய்தியை அவர்களுக்கு அனுப்பும் - இது வெற்றிபெறுவதற்கான நமது விருப்பத்தை மட்டும் காண்பிக்காமல், அதைச் சரியான வழியில் செய்வதைக் காண்பிக்கிறது. மற்றவர்களது தகவல்களை, நம்முடையதை அவர்கள் எவ்விதம் நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அவ்விதமே நடத்துங்கள்.

## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### “மற்ற தரப்பினர்” என்றால் என்ன?

மற்ற தரப்பினர்களில் எந்த ஒரு நபரோ, அல்லது நிறுவனமோ, Tennecoவுடன் வர்த்தகம் செய்பவர்கள், செய்ய விரும்புபவர்கள் அடங்குவார்கள்.

மற்ற தரப்பினருடன் பணியாற்றுவதற்கான யோசனைகள்:

- ஒரு தரப்பினருடன் பணியாற்றத் தொடங்குமுன், அவர்கள் பின்னணி பற்றி முறையாக ஆராயுங்கள்.
- உங்கள் வணிகர்களை ஈடுபடுத்துமுன் அவர்களைப்பற்றி அறிந்து கொள்ள (அவர்கள் தரம், நற்பெயர், நிதி ஸ்திரத்தன்மை, பகிர்ந்துகொள்ளும் மதிப்புகள்) சிறிது முயற்சி செய்யுங்கள்.
- இடர்களை சமாளிக்க போதிய கட்டுப்பாடுகளை பயன்படுத்துங்கள்.
- நமது முக்கிய மதிப்பீடுகள் மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்து அவர்கள் புரிந்து கொள்வதை உறுதி செய்யுங்கள்.
- உடன்படிக்கை ஒப்பந்தங்களில் கீழ்கண்டவை இருப்பதை உறுதி செய்யவும்:
  - அவர்களால் எதிர்பார்த்தபடி வழங்க முடியுமா (சரக்குகள் அல்லது சேவைகள்)
  - கமிஷன் அல்லது இதில் உள்ள கட்டணங்களை ஈட்டுவது அல்லது பிற பண கட்டணங்களை செலுத்துவது குறித்த அடிப்படை
  - இதற்கான விலை அல்லது கட்டணம்
  - சட்டபூர்வமான கடமைகளுக்கு இணைவு
- ஆவணங்களை கேட்டுப்பெற்று ஆராயுங்கள், அவர்கள் ஒழுங்காக பணம் திருப்பி செலுத்துகிறார்களா என்று.
- நமது வணிகர் தணிக்கை நடைமுறையை பின்பற்றுவீர்.



## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்
சப்ளையர் நடத்தை குறியீடு



# நமது முதலீட்டைப் பாதுகாத்தல்

நாம் சரியான வழியில் வெற்றிபெற வேண்டும் என்ற உறுதிப்பாட்டினாலேயே மக்கள் நமக்கு மதிப்பளிக்கிறார்கள். ஒவ்வொரு நாளும், பலன்களைக் கொடுப்பதற்காக, முந்தைய நாளைவிட இன்னும் சிறந்த விதத்தில் இருக்கக் கடுமையாக உழைக்க நாம் வருவோம் என்பது அவர்களுக்குத் தெரியும். ஒருவருக்கு ஒருவர், நமது நிறுவனத்திற்கு, நமது உறவுகளுக்கு மரியாதையளித்து, பாதுகாப்பதன் மூலமாகவும், நமது வர்த்தகப் பெயரின் நாணயத்தைப் பராமரிப்பதற்கான பொறுப்பை எடுத்துக் கொள்வதன் மூலமாகவுமே நாம் அவர்களது நம்பிக்கையைச் சம்பாதிக்கிறோம்.

## இந்தப் பிரிவில்:

- ஆவணங்கள் மற்றும் நிதியறிக்கைகளைத் துல்லியமாகப் பராமரித்தல்
- ஆவணங்களைப் பராமரித்தல்
- நமது சொத்தின் மீது அக்கறை கொள்ளுதல்
- ரகசிய தகவல்களை பாதுகாத்தல்
- தனியுரிமையைப் பாதுகாத்தல்
- அரசுடன் தொடர்பு கொள்ளுதல்
- அரசியல் செயல்பாட்டில் பங்கேற்றல்

# ஆவணங்கள் மற்றும் நிதியறிக்கைகளைத் துல்லியமாகப் பராமரித்தல்

## இலக்கு

நமது ஆவணங்களும், அறிக்கைகளும், நமது தொழிலைத் துல்லியமாகப் பிரதிபலிக்கின்றன என்பதை உறுதி செய்தல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

ஆவணங்கள் மற்றும் நிதியறிக்கைகளைத் துல்லியமாகப் பராமரித்தல் என்பது ஆரோக்கியமானதோர் தொழிலின் இதயம் போன்றதாகும். இது, புத்திசாலித்தனமான முடிவுகளை எடுத்திடவும், சட்டத்தின் சரியான பக்கத்தில் இருந்திடவும், நமது பணம் எங்கு செல்கிறது என்பதை அறிந்திடவும் நமக்கு உதவுகிறது.

நாம் அனைவரும் நமது நிறுவனத்தின் சாதனைகளுக்குப் பங்களிக்கிறோம், ஆகவே, நமது பங்களிப்புகள் நேர்மையானவையே என்பதை நாம் உறுதி செய்வோம். நீங்கள் பதிவு செய்வதெல்லாம் - அது உங்களது நேரமோ, ஒரு செலவோ, அல்லது ஒரு தொழில் பரிவர்த்தனையோ - அதை நாணயத்தோடு செய்யுங்கள். நீங்கள் அவ்வாறு செய்யும் போது, நமது முதலீட்டாளர்கள், நமது வாடிக்கையாளர்கள், நமது சக பணியாளர்கள் மற்றும் நமது சமூகங்களோடு நம்பிக்கையை வளர்க்க எங்களுக்கு நீங்கள் உதவுகிறீர்கள்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

நேர்மையாக இருத்தல். *உங்கள் குழுவினர் அந்த மாதத்திற்கான வரவு-செலவுக் கணக்கை அடைந்திருப்பதால், உங்கள் குழு உறுப்பினர் ஒருவர் செலவு அறிக்கை ஒன்றை அளிக்கக் காத்திருப்பதாகச் சொல்கிறார். நீங்கள் அவரிடம், நமது கணக்குகள் துல்லியமாக இருக்க வேண்டும் என்று ஞாபகப்படுத்தி, அதைச் சமர்ப்பிப்பதைத் தொடர்ந்து கவனிக்கிறீர்கள். அது ஒரு சரியான தெரிவுதானா?* ஆம்! வரவு-செலவுத் திட்டத்தை வகுப்பதை விட, துல்லியமான ஆவணங்களை வைத்திருப்பது அதிக முக்கியமானதாகும். ஒரு பொய்யை விட, வரவு-செலவுத் திட்டத்தை வகுக்கத் தவறியதைத் விளக்கிச் சொல்வது எளிதானதாகும்.

நேர்மையுடன் செயல்படுவது நம் வெற்றிக்கு அடித்தளம் ஆகும்.

### எச்சரிக்கை.

அறிக்கைகளை சரிபார்த்தல். *அது ஒரு காலாண்டு முடிவு, அதோடு உங்கள் குழுவினர் இலக்கை அடைந்து விடுவார்கள் என்பதால் உங்கள் குழுத்தலைவர் மகிழ்ச்சியில் உள்ளார். இருந்தாலும், இன்று காலை, அனுப்பி வைக்க வேண்டிய ஒரு மிகப் பெரிய தொகுதி, காலாண்டு முடிவிற்கு அடுத்த நாள் வரை தாமதமாகி விடுறது. ஏதாவது ஒரு விதத்தில், அதையும் சேர்த்துக் கொள்வது. சரியா?* அவ்வளவு துரிதமாகச் செய்யக்கூடாது. நீங்கள் இக்கேள்வியைக் கேட்பது நல்லதே. எப்போதும் நாணயத்துடன் பணியாற்றி, நமது விற்பனை முறையான கணக்கிடுதல் விதிகளுக்கு இணங்கவே இருக்கிறது என்பதை உறுதி செய்வதே முக்கியமாகும். வாங்குவதை உறுதி செய்திருந்து, சரக்குகளை காலாண்டு முடிவிற்கு வெறும் ஒரு நாளுக்குப் பிறகே அனுப்பி வைப்போம் என்ற போதிலும் கூட, அதை நம்மால் கணக்கில் எடுக்க முடியாது. நமது முதலீட்டாளர்களும், தணிக்கையாளர்களும், நாம் துல்லியமானவர்களாக இருக்க வேண்டும் என்கிறார்கள்.

### தவறான வழி.

சந்தேகங்களை அலட்சியம் செய்தல். *குழு உறுப்பினர் ஒருவர் அவர்கள் பூர்த்தி செய்திராத ஒரு பட்டியல் கணக்கை முடித்துக் கொள்வதை நீங்கள் காண்கிறீர்கள். அது உங்கள் துறையல்ல, ஆகவே நீங்கள் கண்டும் காணாமல் செல்கிறீர்கள். இது சரியா?* இல்லை. பதிவேடுகளைத் தவறாகப் பதிவிடுவது என்பது ஒருபோதும் சரியல்ல. மனம் திறந்து பேசுங்கள்.

## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### மேலும் ஏதாவது அறிந்து கொள்ள விரும்புகிறீர்களா?

- வர்த்தக ஆவணங்களை கவனமாக, முழுமையாக, உண்மையாக, எளிதில் புரிந்துகொள்ளும் விதமாக ஆவணப்படுத்துங்கள்.
- நீங்கள் ஆவணப்படுத்தும் அனைத்திற்கும் ஆதரவானவற்றை வைத்திருங்கள், அதாவது பொருள் வாரியான ரசீதுகள், இரவு உணவு அல்லது நேற்றைய பாதுகாப்பு பரிசோனை முடிவுகள் போன்றவை.
- அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே ஆவணங்களில் கையொப்பமிட்டு ஒப்புதல் அளியுங்கள்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்
நிதி விதிகள்



# ஆவணங்களைப் பராமரித்தல்

## இலக்கு

நமது அன்றாட தொழில் பழக்கங்களுக்குத் துணைபுரிகிற தகவல்களை உரிய நேரத்தில் அணுகிப்பெறத் தருதல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

நாம், காகிதம் மற்றும் மின்னணு, வடிவில், நிறைய தொழில் பதிவேடுகளை உருவாக்கி, நமது வரி, சட்டம், இணக்கம் மற்றும் நிதி கட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்கிற பதிவேடுகளைத் தக்க வைக்கிறோம். இது நமது நிறுவனத்தைப் பாதுகாக்கிறது. இருப்பினும், நாம் எல்லாவற்றையும் என்றென்றைக்கும் வைத்திருப்பதில்லை. வைத்திருக்க வேண்டியதல்லாத, தேவையற்ற பதிவேடுகளை முறையாக அழிப்பது, நமக்குத் தேவையானதைத் துரிதமாகவும், எளிதாகவும், பெரும் செலவை மிச்சப்படுத்தும் வழியிலும் தேடிக்கண்டுபிடிக்க உதவுகிறது.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

தனிப்பட்ட தகவல்களை பாதுகாத்தல். *நமது SharePoint இணையதளங்களில் ஒன்றில், நமக்கு இனிமேல் தேவைப்படாத வாடிக்கையாளர் தகவல்கள் இருப்பது உங்களுக்குத் தெரிய வருகிறது. உங்கள் குழுத்தலைவரிடமிருந்தும், ஆவணங்களின் உரிமையாளர்களிடமிருந்தும் அங்கீகாரத்தைப் பெற்ற பிறகு, நமது ஆவண வைத்திருப்பு கொள்கைக்கு ஏற்ப நீங்கள் அத்தகவல்களை அழித்து விடுகிறீர்கள். முன் மாதிரியான நடத்தை?* நிச்சயமாக. அத்தகவல்களில் நமக்கு மதிப்புடைய தகவல்கள் இல்லை எனும் போதிலும் கூட, கடத்தல்காரன் ஒருவனுக்கு அது அப்போதும் மதிப்புடையதாக இருக்கலாம், அது நம்மை விதிமீறலுக்கு ஆளாகிடச் செய்து விடலாம். அவற்றை முறையாக அழிப்பதன் மூலமாக, நீங்கள் Tenneco நிறுவனத்தையும், நம் மீது நம்பிக்கை வைத்தவர்களையும் பாதுகாக்கிறீர்கள்.

### எச்சரிக்கை.

உறுதிப்படுத்துதலைப் பெறுதல். *தற்போது தீர்த்து விட்டார்கள் என்று நீங்கள் கேள்விப்பட்ட ஒரு சட்ட வழக்கு காரணமாக, நீங்கள் அநேக மின்னஞ்சல்களை சேமித்து வைத்தீர்கள். அதை அழித்து விடுவது சரியா?* சரியாக இருக்கலாம், ஆனால் முதலில் அதை சட்டத் துறையில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். மின்னஞ்சல்களைத் தொழில் பதிவேடுகளாகவே கருதுகிறோம், அதோடு அவற்றை நீங்கள் ஒரு சட்டப் பிடிமானம் இருப்பதாகவே வைத்திருந்தாக வேண்டும். சட்டப் பிடிமானம் என்பது, ஆவணங்களை நாம் ஒரு வழக்கிற்காக, அவை நாம் வெற்றிபெற உதவும் என நினைக்கிறோமோ இல்லையோ, அதைப் பொருட்படுத்தாமல், பாதுகாத்து வைக்கும் நடைமுறையேயாகும்.



## தவறான வழி.

மிக சீக்கிரத்தில் அழித்திடுதல். *உங்கள் வன்தகட்டில் பல ஆண்டுகளுக்கு முன் தேதியிட்டு, நீங்கள் பதிவிறக்கம் செய்து சேமித்து வைத்த நிதிப் பதிவேடுகள் இருப்பதை நீங்கள் கண்டு, அவற்றை அழித்து விடுகிறீர்கள். இது பெரிய விஷயமல்லவே?* மிகப் பெரிய விஷயமாகும். அனைத்து நிதி சார்ந்த பதிவேடுகளையும், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளின் அதிகாரப்பூர்வ நகல்களையும், நிறுவனத்தின் கணினிகளில் அல்லது அங்கீகாரம்பெற்ற பயன்பாடுகள் மற்றும் வைப்பகங்களில் வைத்திருக்க வேண்டும். ஆயினும், இந்த நிலையில் அல்லது இதையொத்த நிலையில், **எதையும்** அழிப்பதற்கு முன்பாக, உங்கள் மேலாளரிடம் பேசி, நமது ஆவண வைத்திருப்பு கொள்கையைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். அது, தகவல்களை இருப்பு வைத்தல், தக்க வைத்தல் மற்றும் அழிப்பதற்கான கால நிலைகளை விளக்கிச் சொல்கிறது. அதோடு கூட, அழிப்புத் தேதியைப் பொருட்படுத்தாமல், சட்டப் பிடிமானத்தில் உள்ள ஆவணங்களை அல்லது சட்டப்படி அழிக்கக்கூடாத (நிரந்தரச் சொத்து ஆவணங்கள் போன்றவை) பதிவேடுகளை நாம் ஒருபோதும் துறந்திடக் கூடாது. நமது கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம், நீங்கள் நாணயத்திற்கான உங்களுடைய உறுதிப்பாட்டைக் வெளிக்காண்பிப்பீர்கள்.

## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### ஆவணங்களை பராமரிப்பது என்பது எப்படி இருக்கும்?

அது, நம் கொள்கைகளை அப்படியே பின்பற்றுவதற்கு மேல். இது பொது அறிவை பயன்படுத்துவதாகும். ஒருமுகப்படுத்தி வைத்து இருங்கள், எது வேண்டுமோ அதை வைத்திருங்கள். அந்த வகையில், ஏதேனும் அதிகாரபூர்வ ஆய்வு அல்லது தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டால், நாம் பொறுப்புடன் பதிலளிக்கலாம்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்



# நமது சொத்தின் மீது அக்கறை கொள்ளுதல்

## இலக்கு

நம்முடையதை நன்கு பராமரித்தல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

நீங்கள், உங்களது பதவியைப் பொருட்படுத்தாமல், மதிப்பு மிக்க நிறுவனச் சொத்திற்குப் பொறுப்பானவராக இருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. நீங்கள் சாதனங்களை இயக்குகிறீர்களா, கணினி ஒன்றில் தட்டச்சு செய்கிறீர்களா அல்லது அறிவுசார் சொத்தை அணுகுகிறீர்களா? இவை அனைத்துமே, Tenneco நிறுவனத்திற்குச் சொந்தமான அல்லது வணிகத்தை நடத்தப் பயன்படுத்தும் நிறுவனச் சொத்திற்கான உதாரணங்களாகும். அவற்றை பராமரிப்பதற்கு நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட பொறுப்பிருக்கிறது.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

நன்றாகக் கவனித்துக் கொள்ளுதல். *மசகு எண்ணெய் சரியாக இடாததால், உங்களது போர்க்லிஃப்ட் எந்திரத்தின் இயங்கும் பகுதிகளில் சில உராய்வுகள் இருப்பது உங்களுக்குத் தெரிகிறது. நீங்கள், நிறுவனத்தின் நிலையான செயல்முறைகளின்படி, உடனடியாக அந்த சாதனத்தை இயக்குவதை நிறுத்திவிட்டு, அது குறித்து பராமரிப்பு பிரிவிற்கு அல்லது உரிய பகுதிக்கு தகவல் தெரிவிக்கிறீர்கள், அவ்வகையில் அவர்களால் சரியான வகை எண்ணெய் மற்றும் மசகை ஒவ்வொரு பாகத்திற்கும் இடமுடியும். சரியான நடவடிக்கையா?* நிச்சயமாக! நமது இயல்நிலைச் சொத்துக்களை முறையாக பராமரிப்பதை உறுதி செய்வதெல்லாமே நமது பணியாகும். பராமரிப்புத் துறையை உடனே தொடர்பு கொள்வதன் மூலமாக, நீங்கள் உங்களது எந்திரத்தைப் பராமரிக்கிறீர்கள் - அதன் ஆயுளை நீட்டிக்கிறீர்கள்.

இது ஒரு வெறும் பெயரல்ல. *நீங்கள், நம்முடையதைப் போன்றதோர் பெயரையும், லோகோவையும் உபயோகிக்கிற ஒரு நிறுவனத்தைப் பார்க்கிறீர்கள். சக ஊழியர் ஒருவரோ, அது மிகச் சரியாக அதைப் போலவே இல்லை, ஆகவே கவலைப்பட வேண்டாம் எனச் சொல்கிறார். ஆயினும், அது குறித்து நீங்கள் தகவல் தொடர்புக் குழுவிற்கும், சட்டத் துறைக்கும் அறிவித்திட முடிவு செய்கிறீர்கள். சரியான தெரிவா?* நிச்சயமாக. நமது வர்த்தகப் பெயர்களும், அவற்றோடு தொடர்புடைய வர்த்தகக்குறிகளும், லோகோவும் , மதிப்புமிக்க சொத்தாகும், அதோடு, குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் ஒரே மாதிரியாக இருக்கிற பெயர்கள் மற்றும் அடையாளங்களைப் பார்ப்பதை எப்போதுமே அறிவித்திட வேண்டும், அவ்வகையில், நிறுவனம் எடுக்க வாய்ப்புள்ள சட்டபூர்வ நடவடிக்கை பற்றி பரிசீலிக்கலாம். “நீங்கள் எதையாவது ஒன்றைக் கண்டால், எதையாவது ஒன்றைச் சொல்லுங்கள்” என்பதே, நமது வர்த்தகப் பெயரைப் பாதுகாத்தல் என வரும் போது, சரியான அணுகுமுறையாக இருக்கும்.


### எச்சரிக்கை.

எளிதாக .... ஆனால் நீண்டதாக வைத்திருங்கள். *உங்கள் கடவுச்சொல்லை நினைவில் வைத்திருப்பது உங்களுக்கு கடினமாக இருக்கிறது, உங்களுக்கு மறக்காத ஒன்றை வைத்துக் கொள்கிறீர்கள். இது சரியா?* இருக்கலாம். நீங்கள், எளிதாக திருடிவிடக்கூடிய ஒன்றைத் தேர்வு செய்யவில்லை என்பதை உறுதி செய்யுங்கள். ஓர் கடவுச்சொற்றொடரை உபயோகித்துப் பாருங்கள். கடவுச்சொற்றொடர் என்பது எழுத்துக்களின் தொகுப்பிற்குப் பதிலாக அமையும், வார்த்தைகளின் தொகுப்பாகும். அவை நீண்டவையாக இருக்க முற்படுகின்றன (இது அவர்கள் அவற்றை கண்டறிவதைக் கடினமாக்குகிறது), ஆனால் எளிதானவையாக இருக்கின்றன (அவற்றை ஞாபகம் வைத்துக்கொள்வதை எளிதாக்குகிறது).

பயணத்திற்குத் தயாராகுதல். *நீங்கள் காலையில் பணிக்கான பயணத்திற்குச் செல்லத் தயாராகிறீர்கள், அதோடு உங்கள் மடிகணினியை எடுத்துச் செல்வதை மறக்க விரும்பவில்லை. நீங்கள் அதனை இரவு முழுவதும் காரிலேயே வைத்திருக்க யோசிக்கிறீர்கள், ஆனால் - பதிலாக, அதை வெளியேறும்போது எடுத்துச் செல்ல வசதியாக, உங்களது முதுகுப்பையில் வைத்துவிடுகிறீர்கள். நல்ல முடிவா?* பெரும்பாலும். உங்களது காரில் வைக்காத வரை நீங்கள் புத்திசாலியே. தவறான ஒருவர் உங்களைப் பார்த்து விட்டால், அவர் அதைத் திருடி விடலாம். நீங்கள் உங்களது மடிகணினியில் நிறுவனம் குறித்த முக்கிய தகவல்களை வைத்திருக்கலாம். ஆகவே, உங்களது மடிகணினியைப் பாதுகாப்பான இடத்தில், ஒரு பையில் வைத்து பாதுகாப்பதோடு கூடுதலாக, தரவுகளை மறைகுறியீடு செய்து வைத்திருப்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

## தவறான வழி.

*விலகிச் செல்லுதல். நீங்கள் உங்களது பணிக் கணினியில் இருக்கும் போது, அலுவலர் ஒருவருக்கு இரகசியமான தகவல்களை அனுப்புமாறு சொல்லி, வழக்கத்திற்கு மாறானதோர் மின்னஞ்சல் வந்திருப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். அது அவசரமானதாகத் தெரிகிறது, ஆகவே நீங்கள் உடனடியாக இணங்க வேண்டும் ... சரியா?* தவறு. இணையவழி தாக்குதல்கள் பெரும்பாலும் புதிரான மின்னஞ்சல்களாகவே வருகின்றன. உங்களுக்கு, அனுப்பியவர் யார் என்று புரியவில்லை என்றாலோ, அல்லது ஏதேனுமொரு வழியில் அது சந்தேகத்திற்கிடமானதாகத் தெரிந்தாலோ, அந்த மின்னஞ்சலை மூடிவிட்டு, தகவல் தொழில்நுட்பத் துறையைத் தொடர்புக் கொள்ளுங்கள்.



## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### நம் “சொத்து” என்ன?

சில வகையான சொத்துகளை நாம் பராமரிக்க வேண்டும். அவை:

- பொருள் சொத்து (உபகரணங்கள், தயாரிப்புகள், பாகங்கள், மூலப்பொருட்கள், கணினிகள் மற்றும் தொலைபேசிகள் என்று எண்ணிப்பாருங்கள்)
- தொழில்நுட்ப உள் கட்டமைப்பு சொத்துகள் (மின்னஞ்சல், இணையதள அணுகு வாய்ப்பு மற்றும் மென்பொருள் போன்றவற்றை எண்ணுங்கள்)
- நிதிசார் சொத்து (ரொக்கம் மற்றும் வங்கிக் கணக்குகள் போன்றவை)
- அறிவுசார் சொத்து (ரகசிய தகவல்கள், புதுமை பொருட்கள், காப்புரிமை, வணிகக்குறியீட்டு சின்னம் மற்றும் கண்டுபிடிப்புகள்)

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்

# ரகசிய தகவல்களை பாதுகாத்தல்

## இலக்கு

இரகசியமான தகவல்களைப் பாதுகாத்து, பேணிக்காத்து, முறையாக உபயோகிக்க கூடுதல் முயற்சி எடுங்கள்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

நமக்குச் சொந்தமாகவுள்ள தகவல்கள் மதிப்புமிக்கவையாகும், பெரும்பாலும் அது மற்றவர்களுக்குத் தெரியாது என்பதால் தான். இந்த இணைய உலகில் எல்லாமே தரவுகளில் தான் இயங்குகிறது என்பது ஒன்றும் இரகசியமல்ல. நமது பராமரிப்பில் இருக்கிற தகவல்கள், நமது வாடிக்கையாளர்களுக்குத் தனிப்பட்ட அனுபவங்களை உருவாக்கித் தரவும், புகழ்வாய்ந்ததும், திறமைமிக்கவர்களுமான குழு உறுப்பினர்களைப் பணியமர்த்திக் கொள்ளவும், விற்பனைச் சந்தையில் நாம் போட்டியில் முந்தியிருக்கவும் நமக்கு வழி செய்கிறது. அவற்றை நாம் பேணிப் பாதுகாக்காவிட்டால், காரியங்கள் விரைவிலேயே தவறாகப் போய்விட முடியும்.

அதனாலேயே தான் நாம் இரகசியத் தகவல்களை, அவை நம்முடையதோ, ஒரு வாடிக்கையாளருடையதோ அல்லது பொருட்களை வழங்கும் ஒருவருடையதோ, அவற்றை முறையாக இருப்பு வைத்துப் பாதுகாப்பாக வைத்துக் கொள்கிறோம்.

சில தகவல்களை நாங்கள், விளம்பரம் செய்வது, உற்பத்திப் பொருள் ஆவணப்படுத்துதல், பத்திரிக்கைச் செய்திகள் மற்றும் பொது நிதியறிக்கைகளை அறிவித்தல் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களுக்கு வெளியிட்டாலும் கூட, மற்ற எல்லாவற்றையும் நாங்கள் உரியதும் நியாயமானதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலமாகவும், பொருந்துகிற இடங்களில், சட்டபூர்வமான ஒப்பந்தங்கள் மூலமாகவும் பேணிப்பாதுகாக்கிறோம். முறையான அங்கீகாரம் இல்லாமல், அல்லது தங்களது பணிக்கு அவசியப்படாத எவரோடும் நாங்கள் ஒருபோதும் இரகசியத் தகவல்களைப் பகிர்வதில்லை.

ரகசியத் தகவல்களை பாதுகாப்பதற்கான நியாயமான மற்றும் உரிய கட்டுப்பாடுகளை நாங்கள் எப்போதும் உறுதி செய்கிறோம்.

## நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

**அந்தரங்கமாகப் பேசுங்கள்.** *உங்களுடைய மேலாளரிடமிருந்து உங்களுக்குத் தொலைபேசி அழைப்பு வரும் போது நீங்கள் நெரிசல்மிக்க மின்தூக்கி ஒன்றில் இருக்கிறீர்கள். அவர், நீங்கள் திட்டமிட்டுள்ள புதிய விற்பனைப்படுத்தும் உத்தி குறித்துத் தெரிந்துகொள்ள விரும்புகிறார். நீங்கள் அழைப்பிற்குப் பதில் கொடுத்தாலும், அத்தகவல்களை அவரோடு பகிர்ந்து கொள்வதற்கு முன்பாக, உங்கள் அலுவலகம் வந்து, கதவை மூடிக்கொள்ளும் வரை காத்திருக்கிறீர்கள். சாமார்த்தியமான நடவடிக்கை?* ஆம். இரகசியமான தகவல்கள் பலவழிகளில் வெளியே கசிந்து விடுகின்றன, அதில் மின்தூக்கிகள் போன்ற பொது இடங்களும் அடங்குகின்றன. நாம் என்ன சொல்கிறோம், அதை எங்கு சொல்கிறோம் என்பதைக் குறித்து கவனமாக இருப்பது முக்கியமானதாகும்.

**தகவல்களைப் பாதுகாத்து வைத்தல்.** *இரகசியமான தகவல்கள் பொது இடத்தில் இருக்கிறதோர் அச்சு எந்திரத்தில் இருப்பதை நீங்கள் காண்கிறீர்கள். அத்தகவல்களைப் பாதுகாத்து வைப்பதன் அவசியம் குறித்து, அவற்றை விட்டு சென்ற நபருக்கும், அவரது மேலாளருக்கும் உங்களால் தெரிவிக்க முடிகிறவரை, நீங்கள் அத்தகவல்களைப் பாதுகாப்பாக எடுத்து வைக்கிறீர்கள். சரியான அணுகுமுறை தானே?* கச்சிதமாக! இரகசியமான தகவல்களை, அவற்றைப் பெற்றுக்கொள்ள அங்கீகாரம் பெறாத எவரோடும் (கவனக்குறைவாகவோ அல்லது வேறுவகையிலோ) பகிர்ந்து கொள்ளக் கூடாது.

## எச்சரிக்கை.

**இரகசியமான மின்னஞ்சல்களை அனுப்புதல்.** *நெருக்கடியான காலக்கெடுவில் முடிப்பதற்காக நீங்கள் இரகசியமான ஏதோவொன்றை மின்னஞ்சல் வாயிலாக அனுப்ப வேண்டியிருக்கிறது, ஆகவே அதை ஒரு வேர்ட் டாக்குமெண்ட் ஆக இணைத்து, அந்த மறைகுறையீடு செய்த கோப்பை, நேரத்தை மிச்சப்படுத்துவதற்காக கடவுச்சொல்லுடன் அனுப்புகிறீர்கள். இது காரியங்களைப் பத்திரமாக வைத்துக்கொள்ளும், சரி தானே?* இருக்கலாம். அந்த மறைகுறியீடு செய்ததற்கான கடவுச்சொல்லைத் தனியாக அனுப்புவதை உறுதி செய்யுங்கள் போதும்.

**யார் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்பதை தெரிந்து கொள்ளுதல்.** *பொருள் அளிப்பவர் ஒருவர் அவ்வழியில் நடந்து செல்லும் போது, நீங்களும், உங்கள் குழுவினரும் உற்பத்தி முறை மேம்பாடு குறித்து கலந்துரையாடிக் கொண்டிருக்கிறீர்கள். அப்பொருள் அளிப்பவர் நீங்கள் பேசுவதைக் கேட்பதற்காக நின்றிருக்கும் போதும் கூட, உங்கள் மேலாளர் தொடர்ந்து கூட்டத்தை நடத்துகிறார். பொருள் அளிப்பவர் இரகசியத்தன்மை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதால், அவர் நிற்பது பரவாயில்லை என்று உங்கள் மேலாளர் சொல்கிறார். இது சரியா?* தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லாதவர்களோடு நமது இரகசியமான தகவல்களைப் பகிர்ந்து கொள்வதைத் தவிர்த்தலே அவற்றைப் பேணிப்பாதுகாப்பதற்கான மிகச்சிறந்த வழியாகும். உங்கள் குழுத்தலைவர் விவாதத்தை முடிக்க முடிகிற வகையில், பொருள் அளிப்பவரை பணிவோடு அங்கிருந்து செல்லும்படி செய்யுங்கள்.

## தவறான வழி.

ரகசியமான தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல். *நீங்கள் சொந்த வலைப்பதிவு ஒன்றை ஆரம்பிக்கிறீர்கள், அது பணியிடத்தில் நடைபெறும் கதைகளையும் அலசுகிறது. நீங்கள் ஆர்வத்தைத் தூண்டுவதற்காக, இன்னும் வெளிவராத உற்பத்திப் பொருள் தயாரிப்பு வடிவங்களைக் குறிப்பிட்டு, அவ்வகையில் அது விற்பனை இலக்குகளை அடைவதை எளிதாக்க உதவும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். விற்பனை மேதாவியா?* இல்லவே இல்லை. நமது போட்டியாளர் ஒருவர் நமது வடிவமைப்புகளைப் போன்றே ஒன்றை வடிவமைத்திட முடியும், அதோடு அத்தயாரிப்பின் வடிவமைப்புகளை காப்புரிமை செய்வதற்கான நமது முயற்சிகளை நீங்கள் குறைத்து மதிப்பிட்டிட முடியும். நாம் உருவாக்குபவற்றைப் பேணிப்பாதுகாக்க உதவுவதன் மூலம் உங்களது பங்கினைச் செய்யுங்கள்.



## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### ரகசிய தகவல்களை எப்படி பாதுகாப்பது?

நிறுவனத்தின் அனைத்து தகவல்களும் ரகசியமானவை என்று நினைத்துக் கொள்ளுங்கள், உங்களுக்கு உறுதியான உத்தரவு வரும் வரை, மேலும் கீழ்கண்டவற்றை உறுதி செய்யுங்கள்:

- மடிக்கணினி மற்றும் மொபைல் கருவிகள் போன்றவற்றை மின்னணு ரீதியாக பாதுகாப்பாக வைத்திருங்கள்.
- வெளியே செல்லும்போது உங்கள் பணிநிலையத்தைப் பூட்டி வையுங்கள்.
- வலுவான கடவுச்சொற்களை (பாஸ்வேர்டுகளை) பயன்படுத்துங்கள். பாஸ்வேர்டுகளை பாதுகாப்பாக வைத்திருங்கள்.
- பாதுகாப்பு மென்பொருளை நிறுவி அவற்றை அவ்வப்போது அப்டேட் செய்து வையுங்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட நபர்களுடன் மற்றும், தெரிந்துகொள்ள வேண்டிய நபர்களிடம் மட்டுமே தகவல்களை பரிமாறிக்கொள்வதை உறுதி செய்யுங்கள்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்

# தனியுரிமையைப் பாதுகாத்தல்

## இலக்கு

தனியுரிமையை பாதுகாப்பதும், நாம் தனிப்பட்ட தகவல்களை ஒரு நியாயமானதும், வெளிப்படையானதுமான முறையிலேயே சேகரித்து, பயன்படுத்தி, பகிர்ந்து கொண்டு, தக்கவைக்கிறோம் என்பதை உறுதி செய்தல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

நம்மிடம் தங்களது தனிப்பட்ட தகவல்களைத் தருகிற, குழு உறுப்பினர்கள், பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள், மற்றும் ஏனையோர், அவற்றை நாம் கவனத்தோடு கையாளுவோம் என நம்புகிறார்கள். நாம் தனிப்பட்ட தகவல்களை சட்டப்பூர்வமாகவும், உரிய விதத்திலும், அவற்றை வழங்கிய நோக்கங்களுக்காகவும் மட்டுமே பயன்படுத்துகிறோம்.

எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கை காரணமாக, நாங்கள் தனியுரிமையை மிகத் தீவிரமானதாக எடுத்துக் கொண்டு, எம்முடன், எமக்காக மற்றும் எமது சார்பாக பணிபுரியும் ஒவ்வொருவரும் நமது தனியுரிமை பழக்கவழக்கங்களையும், பொருந்துகிற சட்டங்களையும் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை உறுதி செய்கிறோம். இதில், நாங்கள் சேகரிக்கும் தனிப்பட்ட தகவல்களின் வகை, அவற்றை எவ்வாறு நாங்கள் பயன்படுத்துகிறோம் மற்றும் தங்களது தனிப்பட்ட தகவல்கள் சம்பந்தமாக அவர்களுக்கு இருக்கிற உரிமைகள் ஆகியவை அடங்குகின்றன.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

அந்தரங்க உரிமைகளை மதித்தல். *குழு உறுப்பினர் ஒருவர் பேறுகால விடுமுறையில் சென்றிருக்கிறார், பொருள் வழங்கும் ஒருவர், அவருக்கு வாழ்த்து அட்டை அனுப்புவதற்காக அவரது வீட்டு முகவரியைக் கேட்கிறார். நீங்கள் அதற்குப் பதிலாக அவரது தொழிற்சாலை முகவரிக்கே அந்த அட்டையை அனுப்பி வைக்குமாறு சொல்கிறீர்கள். சரியான அணுகுமுறை தானே?* ஆம். பொருள் வழங்கும் ஒருவரோடு - அல்லது வேறு எவரோடும் - உங்களது குழு உறுப்பினரின் ஒப்புதல் இல்லாமல் அல்லது நமது கணிணிகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களை அணுகிப்பெறும் நிலையில் தனியுரிமை அலுவலகத்தின் ஒப்புதல் இல்லாமல், வீட்டு முகவரி அல்லது தனிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்து கொள்ளக்கூடாது.

### எச்சரிக்கை.

இணைய பாதுகாப்பினை பழகுதல். *உங்களுக்கு, நீங்கள் ஒரு போட்டியில் வெற்றி பெற்று விட்டதாகவும், உங்கள் ஒட்டுமொத்த குழுவினரையும் ஒரு இலவச, பிரத்தியேகப் பணிப்பட்டறைக்காகப் பதிவு செய்திட வேண்டும் என்று சொல்லி ஒரு மின்னஞ்சல் வருகிறது. நீங்களோ அந்த மின்னஞ்சலில் வைரஸ் இருக்கலாம் அல்லது நமது கணிணியைக் கடத்துவதற்கான முயற்சியாக இருக்கலாம் என நீங்கள் நினைக்கிறீர்கள், ஆகவே அந்த மின்னஞ்சலில் இருக்கும் இணைப்புகள் அல்லது இணைவுகள் எதையும் திறக்காமலேயே அந்த மின்னஞ்சலை அழித்து விடுகிறீர்கள். ஏதேனும் நடைமுறையை நீங்கள் தவறவிட்டீர்களா?* இருக்கலாம். நமது கணினிப் பாதுகாப்பு அமைப்புகள் எவ்வளவு வலுவாக இருந்தாலும் சரி, இந்த மின்னஞ்சலில் சொடுக்குவது, கடவுச்சொற்கள், தனிப்பட்ட தரவு அல்லது நிறுவனத் தகவல்களை களவாடுகிறதோர் வைரஸை இயக்கிவிட முடியும் என்பதைத் தெரிந்து கொண்ட நீங்கள் சாமர்த்தியமானவர் தான். அந்த மின்னஞ்சலை அழிப்பதற்குப் பதிலாக, அதனை தகவல் பாதுகாப்பு பிரிவிற்கு அனுப்பி வைத்து, நீங்கள் என்ன பார்த்திருக்கிறீர்கள் என்பதை அவர்களிடம் சொல்லுங்கள், அவ்வகையில் அவர்கள் வேறு எவரும் அதுபோன்ற தவறைச் செய்யாதவாறு இருப்பதை உறுதி செய்வார்கள்.

### தவறான வழி.

நெறிமுறையை புறக்கணித்தல். *நீங்கள் கொள்முதல் பிரிவில் பணியாற்றுகிறீர்கள், அதோடு திட்டம் ஒன்றுக்காக விற்பனையாளர் ஒருவரை தொடர்புகொள்ளுமாறு உங்களுக்கு ஒரு வேண்டுகோள் வருகிறது, ஆக அவர்கள் நமது கணினிகளை அணுகக் கொடுக்கிறீர்கள். இது நெறிமுறையல்ல, ஆனால் அந்த வேண்டுகோள் மிகவும் அவசரமானதாக இருப்பதாலும், அது உயர் நிலை அலுவலரிடம் வந்திருப்பதாலும் அப்படிச் செய்கிறீர்கள். மேற்கொண்டு செல்வது சரியா?* இல்லை. இரகசியமான தகவல்களுக்கான அணுகலை அவர்களுக்குத் தருவதற்கு முன்பாக, தகவல் பாதுகாப்பு பிரிவு அந்த விற்பனையாளரை அங்கீகரித்துள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். நீங்கள் நெறிமுறையைப் பின்பற்றி, நாணயத்தோடு செயல்பட வேண்டியுள்ள தேவையை அந்த அலுவலருக்குத் தெரியச் செய்யுங்கள். வேறுவிதமாகச் செய்யும்படி அவர்கள் உங்களை நிர்பந்தப்படுத்தினால், உதவிக்கு மேலாளர் ஒருவரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### சில உதாரணங்கள் தேவைப்படுகிறதா?

ஒருவரை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அடையாளப்படும் எதுவும் தனிப்பட்ட தகவல்களாகும். அவை:


- பெயர்
- முகவரி
- இமெயில்
- IP முகவரி
- தொலைபேசி எண்
- வங்கி அல்லது கடன் அட்டை தகவல்
- உடல்நலத் தகவல்
- குழு உறுப்பினர் ID

அது “தனிப்பட்ட தகவல்” என்று உறுதியாக அறியவில்லையா? உங்களுக்கு உறுதியாக தெரியும் வரை, அதனை அவ்வாறே நடத்துங்கள்.

தரவு தனியுரிமை குறித்த கேள்விகள் ஏதும் உள்ளதா? தயவுசெய்து, எங்களின் தனியுரிமை அலுவலகத்தை தொடர்புக் கொள்ளுங்கள்.

ஃபிஷிங் மற்றும் ஸ்பேம் உள்ளிட்ட இணைய பாதுகாப்பு குறித்து உங்களிடம் கேள்வி இருந்தால், தயவுசெய்து தகவல் பாதுகாப்பு பிரிவை தொடர்புக் கொள்ளவும்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்



# அரசுடன் தொடர்பு கொள்ளுதல்

## இலக்கு

நாம் பணிபுரியும் எவ்விடத்திலும், அரசுடன் நேர்மையானதும், வெளிப்படையானதுமான உறவுகளை உருவாக்குகுதல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

உலகம் முழுவதும், பல்வேறு அரசு முகமைகள் மற்றும் பிரதிநிதிகளுடன் பணிபுரியும் அதிர்ஷ்டத்தை நாங்கள் பெற்றுள்ளோம். அரசாங்கம் இத்தகைய உறவுகளை உன்னிப்பாகக் கவனிப்பதுடன், அவை குறித்த கடுமையான அவசியங்களை வைத்துள்ளது, ஆகவே நம்பிக்கை, பொறுப்புடமை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவை அத்தியாவசியமானவையாகும்.

அரசு அலுவலர்களுடன் இணைந்து பணியாற்றும்போது – மற்ற அனைத்து வாணிப உறவுகளைப் போலவே – நாங்கள் விதிகளைப் பின்பற்றியே செல்கிறோம், எவ்வித நெறிமுறைகளையும் மீறுவதில்லை. நீங்கள் எப்போதாவது, அனுமதிகள், சுங்கங்கள், கட்டுமானம் அல்லது பிற வகையான பணிகள் போன்றவற்றை ஈடுபடுத்துகிற செயல்பாடுகளில் அரசுடன் ஈடுபட்டிருக்கும் போது, உங்களையும், நிறுவனத்தையும் பாதுகாப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், நீங்கள் நாணயத்தோடு செயல்படுபவர் என்பதை நிரூபிக்கத் தகுந்தவராக இருங்கள்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

ஒத்துழைப்புடன் இணங்குதல். *திடீர் தணிக்கை ஒன்றுக்காக அரசு அதிகாரி ஒருவர் உங்கள் தொழிற்சாலை இருக்குமிடத்திற்கு வருகிறார். அவரை நீங்கள் பணிவுடனும், தொழில்முறையுடனும் வரவேற்ற பிறகு, உங்களுக்கு உதவும் வகையில் சட்டப் பிரிவைத் தொடர்பு கொள்ளுங்கள். சரியான பதில் தானே?* ஆம். நாங்கள் எப்போதுமே அரசு ஆய்வுகள், புலனாய்வுகள் மற்றும் தகவல்களுக்கான வேண்டுகோள்களுக்கு ஒத்துழைப்பு தருகிறோம். சட்டத்துறையினர், அரசு அலுவலர்களின் தேவைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் நன்கு தயாராக இருப்பதால், நீங்கள் சரியானதைத் தான் செய்தீர்கள். உங்களை எப்போதாவது, சட்டத்துறையினர் நேரடியாக அரசு வேண்டுகோள் ஒன்றுக்கு பதிலளிக்க உதவுமாறு கேட்டால், உண்மையைச் சொல்லிவிடுங்கள். ஒருபோதும், எவரையும் தவறாக வழிநடத்தவோ, அவர்களது பணியையும் தடை செய்யவோ, அல்லது ஆவணங்களை மறைக்கவோ, அழிக்கவோ அல்லது மாற்றவோ செய்யாதீர்கள்.

### எச்சரிக்கை.

வழிகாட்டுதலை நாடுதல். *அரசு அலுவலர்கள் பங்கு பெறும் நிகழ்ச்சி ஒன்றை நீங்கள் நடத்துகிறீர்கள், அப்போது Tenneco நிறுவனத்திற்காக சில வியாபார அபிவிருத்திப் பொருட்களைக் கொடுக்க விரும்புகிறீர்கள். பெரிய விஷயமில்லை, சரிதானே?* இருக்கலாம். அரசு அலுவலர்களுக்குப் பரிசு வழங்குவதற்கான விதிகள் மிகவும் கடுமையானவையாகும். உங்கள் நிகழ்ச்சியை நடத்துவதற்கு முன்பாக, நமது நேரடித் தொலைபேசி வசதி மூலம் வழிகாட்ட கோரி, அங்கீகாரம் பெறுங்கள். உங்களது பெருந்தன்மையை யாராவது ஒருவர் இலஞ்சம் எனத் தவறாக எடுத்துக்கொள்வதை நீங்கள் விரும்பவில்லை.



## தவறான வழி.

நெறிமுறையற்ற விதத்தில் ஒப்பந்தம் செய்தல். *அரசுக்கு சொந்தமான நிறுவனம் ஒன்று, திட்டம் ஒன்றுக்கு விண்ணப்பிக்க உங்களிடம் சொல்கிறது. போட்டியாளர் ஒருவருடன் இணைந்து நீங்கள் குறைவான விலைப்புள்ளி கோருவதை உறுதி செய்கிறீர்கள். வணிகத்திற்காக சண்டை போட அவசியமில்லை. இது போன்று ஒன்றாக இணைந்து பணியாற்றுவது, விலைகளை அதிகமாக இருக்கச் செய்கிறது, அவ்வகையில் இரு நிறுவனங்களுமே இலக்குகளை அடைந்திட முடியும். வணிகத்தைப் பாதுகாக்க சிறந்த வழி?* இல்லை. நாம் சரியான வழியில் – நேர்மையாக, அறநெறிப்படி, மற்றும் எப்போதும் நேர்மையுடன் வெற்றி பெறுகிறோம். இது ஒப்பந்தப்புள்ளி மோசடியாகும், அதோடு பெரும்பாலும் இது ஒப்பந்தப்புள்ளி நடைமுறையை குறைத்து மதிப்பிடச் செய்யும் ஒரு நடைமுறையும், சட்டவிரோதமானதுமாகும். உடனடியாக உங்கள் மேலாளர் மற்றும் சட்டத் துறையினரைத் தொடர்பு கொள்ளுங்கள்.



## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### அரசு அலுவலர் என்று யார் கருதப்படுவார்கள்?

“அரசு அலுவலர்” என்ற சொல்லானது மிகவும் விரிவானது மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களுக்கு பொருந்தும். இதில் கீழ்க்கண்டவர்கள் அடங்குவர்:

- அரசு முகமைகளின் ஊழியர்கள்
- அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் நிறுவனங்கள் அல்லது உடமைகள் (உதாரணமாக, அரசு பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், போன்றவை)
- அரசியல் கட்சிகளின் அலுவலர்கள் அல்லது வேட்பாளர்கள்

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்

# அரசியல் செயல்பாட்டில் பங்கேற்றல்

## இலக்கு

நமது சமூகங்களை இன்னும் சிறப்பாக ஆக்குதல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

அரசியல் நடைமுறையில் பங்கெடுப்பதென்பது, நல்லதோர் குடிமகனாகவும், சமூகத்தின் ஆக்கப்பூர்வமான உறுப்பினராகவும் இருப்பதன் ஓர் அங்கமாகும். அரசியல் செயல்பாட்டில் நமது குழு உறுப்பினர்கள் பங்கு பெறுவதற்குள்ள அவர்களது உரிமையை நாம் மதித்து, நமது குழு உறுப்பினர்களிடையே காணப்பெறுகிற பல்வேறு அரசியல் கருத்துக்களைப் பாராட்டுகிற அதே வேளையில், அரசியல் பங்கெடுப்பு என்பது, Tenneco நிறுவனத்தில் செய்யும் நம் பணியிலிருந்து தனிப்பட்டதாக இருப்பதோடு அது, சட்டம் மற்றும் Tenneco நிறுவனக் கொள்கைகளுக்கு ஒத்த வகையில் இருந்தாக வேண்டும்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

**அரசியலைத் தனிப்பட்டதாக வைத்துக் கொள்ளுதல்.** *உங்கள் நண்பர் உள்ளாட்சிப் பதவிக்காகப் போட்டியிடுகிறார். அவருக்கு ஆதரவளிக்கும் வண்ணம், பணியில் இல்லாதபோது, நீங்கள் வாக்கு சேகரிக்க உங்கள் இல்லத் தொலைபேசியை உபயோகிக்கிறீர்கள். சரியான அழைப்பு தானே?* சிறப்பான செயல்பாடு. அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு, ஒரு போதும் நிறுவனத்தின் நேரம் அல்லது தொலைபேசி போன்ற ஆதார வளங்களை பயன்படுத்தாதீர்கள். அரசியலை தனிப்பட்டதாக வைத்திருப்பதற்கு, நீங்கள் வீடு திரும்பும் வரை காத்திருப்பது ஒரு அற்புதமான முறையாகும்.

### எச்சரிக்கை.

**உங்களுக்காகப் பேசுதல்.** *அரசியல் பிரச்சாரத்தில் நீங்கள் ஆற்றிய பணி குறித்து விவாதிக்க, உள்ளூர் செய்தி நிலையம் ஒன்று உங்களுக்கு அழைப்பு விடுக்கிறது. அந்நிலையம் உங்களை,உங்களது பெயர், தொழில் மற்றும் பணிபுரியும் இடத்தை ஆகியவற்றைச் சொல்லி, உங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளுமாறு சொல்கிறது. இது சரிதானா?* ஒருவேளை இருக்கலாம், ஆனால் முதலில் தகவல் தொடர்புத் துறையிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அவர்கள் அங்கீகரித்தால், நீங்கள் பங்கேற்பது நமது கொள்கைகளுக்கு இணங்க இருப்பதை உறுதி செய்து, நீங்கள் வெளிப்படுத்தும் எந்தக் கருத்துகளும் உங்களுடைய தனிப்பட்ட கருத்து என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.

### தவறான வழி.

**நமது பெயரைப் பயன்படுத்துதல்.** *நீங்கள் அக்கறைப்படும் ஒரு அரசியல் காரணத்திற்காக நீங்கள் துண்டு பிரசுரங்களை வினியோகம் செய்ய விரும்புகிறீர்கள், அதோடு நிறுவனத்தின் லோகோவை அதில் பயன்படுத்தினால் உங்களுக்கு நல்ல ஆதரவு கிடைக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அதோடு, உங்கள் துறைத்தலைவருக்கு இந்தக் காரணம் பிடிக்கும், அதனால் அவர் உங்கள் இந்தக் குழுப்பணிக்காகப் பாராட்டுவார் என்பது உங்களுக்குத் தெரியும். எல்லாமே நல்ல காரியத்திற்குத் தான், சரிதானே?* தவறு. முன் அனுமதியின்றி நீங்கள் Tenneco நிறுவனப் பெயரை எந்த அரசியல் செயல்பாட்டுக்கும் பயன்படுத்தக்கூடாது. Tenneco நிறுவனத்தில், அபிப்பிராயங்களின் வேறுபாடுகளை நாம் கொண்டாடிப் பேணிப் பாதுகாக்கிறோம். நீங்களும் அப்படியே இருக்க வேண்டும் என்றே நாங்கள் விரும்புகிறோம்.

### பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

#### ஏதேனும் முக்கிய கவனத்தில் கொள்ள வேண்டுமா?

அரசியல் செயல்பாடுகளில் உங்களது பங்களிப்பு சட்டத்திற்குட்பட்டதாகவும், Tennecoவிற்கு களங்கம் விளைவிக்கக் கூடியதாகவும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

### மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்



# நமது தொழில்துறையை வழிநடத்துதல்

நாம் எங்கிருக்கிறோம் என்பது ஒரு பொருட்டல்ல, நாம் எப்போதும் நாணயத்தோடு செயல்படுகிறோம். நாம் நேர்மையாகத் தொழில் செய்கிறோம். நாம் நியாயமாகப் போட்டி போடுகிறோம், அதோடு நாம் நமது தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தரத்தின் அடிப்படையிலேயே வெற்றி பெறுகிறோம். இது எப்போதுமே எளிதான பாதை அல்ல, ஆனாலும் இதுவே சரியான பாதை அதோடு இதுவே நம் வாடிக்கையாளர்கள், நம் சமூகம், நமது சகாக்கள் மற்றும் நமது பங்குதாரர்கள் ஆகியோரின் நம்பிக்கையை நமக்காக வென்றெடுத்துத் தருகிறது.

## இந்தப் பிரிவில்:


- ஊழலை எதிர்த்துப் போராடுதல்
- குற்றத்தை எதிர்த்துப் போராடுதல்
- நேர்மையாகப் போட்டியிடுதல்
- நலன் முரண்பாடுகளைத் தவிர்த்தல்
- பரிசுகள், கேளிக்கை மற்றும் விருந்தோம்பல் பரிமாறிக்கொள்ளுதல்
- சர்வதேச அளவில் வர்த்தகம் செய்வது

# ஊழலை எதிர்த்துப் போராடுதல்

## இலக்கு

ஊழலுக்கு எதிரான போரில் வெற்றி பெறுதல்

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

ஊழல் சமூகங்களைக் காயப்படுத்துகிறது. லஞ்சம் பெறுபவர்கள், (பரிசுகள், பயணம், உணவு மற்றும் ரொக்கம்) தரமான வேலைக்கு முன்பாக தனிப்பட்ட பலன்களை முதலில் வைக்கிறார்கள். வர்த்தக முடிவு ஒன்றில் முறையற்ற விதத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதற்காக நீங்கள் பணம் (அல்லது மதிப்பு மிக்க ஒன்று) கொடுக்கிற பட்சத்தில், அதை உங்களுக்கு உதவ அல்லாமல் நிறுவனத்திற்கு உதவுவதற்காகவே நீங்கள் செய்தாலும் சரி - அது நமது முக்கிய மதிப்பீடுகளுக்கு எதிராகச் செல்கிறது.

லஞ்சம் ஒரு ஆய்வாளரை, அபாயகரமான பகுதி ஒன்றை கண்டுகொள்ளாமல் விடச் செய்யலாம், அல்லது, தகுதி பெறாத பொருள் வழங்குபவர் ஒருவரிடமிருந்து கொள்முதல் செய்ய, பொருள் வாங்குபவரின் மனதை மாற்றலாம். நாம் இப்படி இயங்குவதில்லை. நாம் எப்போதும் நாணயத்தோடு பணியாற்றுகிறோம். நாம் ஒரு போதும் லஞ்சம் கொடுப்பதில்லை - அல்லது லஞ்சம் பெறுவதில்லை- அதோடு முறையற்ற எதுவும் தெரிவதைக் கூட நாங்கள் தவிர்க்கிறோம்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

மறு தரப்பினரைத் தெரிந்துகொள்ளல் *நீங்கள் பொருள் வழங்குபவர் ஒருவரைத் தேர்வு செய்து கொண்டிருகிறீர்கள் அதோடு அவர்களை சாதுரர்யமாகத் தேர்வு செய்ய விரும்புகிறீர்கள், ஆகவே, நீங்கள் நமது விற்பனையாளர் தகுதி காணுதல், ஏல நடைமுறைகளைப் பின்பற்றி, வர்த்தக பதிவுகள் மற்றும் பொது ஆவணங்களைச் சரிபார்த்து, வர்த்தக நற்சான்றுகளை சீர்பார்த்து, முந்தைய வாடிக்கையாளர்களிடம் பேசி, அவர்களிடம் மாதிரிகளைக் கேட்டுப்பெற்று, தகவல்தெரிந்த முடிவு ஒன்றை எடுக்க இணையத்தில் தேடுகிறீர்கள். நல்ல நடவடிக்கைகள் தானே?* நிச்சயமாக. நாணயத்திற்கு மதிப்பளிக்கிற பொருள் வழங்குபவர்களுடன் பணியாற்றவே நாம் விரும்புகிறோம், அதோடு நாம் நமக்குப் பொருள் வழங்குபவர்களின் வரலாற்றையும், நற்பெயரையும் சரிபார்க்கிறோம். அதைத் தான் நாம் "உரிய கவனம் செலுத்துதல்" என்கிறோம். அவர்கள் உங்களுக்கு இலஞ்சம் தர முன்வரோ அல்லது கொடுக்கவோ கூடாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளச் செய்யுங்கள். அதோடு, ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, எச்சரிக்கை அறிகுறிகள் இருக்கின்றனவா எனக் கவனமாகப் பாருங்கள்.

பதிவேடுகளைத் துல்லியமாக வைத்திருத்தல். *நீங்கள் ஒரு செலவின அறிக்கையை ஆய்வு செய்து கொண்டிருந்து, அதில் ஒன்றைத் தவிர, மற்ற ஒவ்வொரு பரிவர்த்தனையையும் விரிவாக விவரித்திருப்பதைப் பார்க்கிறீர்கள். இது சந்தேகத்திற்குரியதாகத் தெரிகிறது, ஆகவே நீங்கள் அவரை அணுகி, மேலும் தகவல்களைப் பெறுகிறீர்கள்.* அருமையான வேலை. அது ஒரு நேர்மையான தவறாக இருக்கலாம், அல்லது யாரேனும் ஒருவர் எதையோ ஒன்றை மறைக்க முயற்சிக்கலாம். மேலும் சிறந்த வழியே, இன்னும் அதிகம் தெரிந்து கொள்வது தான். லஞ்சமாகஇருக்கக்கூடியஏதோ ஒன்றை நீங்கள் அங்கீகரிக்க விரும்பவில்லை.

> லஞ்சம் அளிக்காமல் இருந்து நாங்கள் ஊழலுக்கு எதிராக போராடுகிறோம் … இது நமது சமூகங்களை மேம்படுத்திட உதவும்.

### எச்சரிக்கை.

அழைப்புகளை ஏற்றல். *புதிய வாடிக்கையாளர் ஒருவர் உங்களுக்கு மதிய உணவு விருந்து அளிக்க விரும்புகிறார். நீங்கள் அதை ஏற்க வேண்டுமா?* நிறுவனத்தின் கொள்கை வரம்பிற்குள் இருந்தால், புதிய வாடிக்கையாளர் விடுக்கும் செலவு அதிகமில்லாத மதிய உணவுக்கான அழைப்பை ஏற்பது ஒருவேளை சரியானதாக இருக்கலாம். அதில், உங்கள் உணவுக்கான கட்டணத்தை நீங்களே செலுத்துவது தான் சிறந்ததாக இருக்கும். இந்த வகையில், நீங்கள், உங்களை வசியப்படுத்தி விடலாம் என்ற உணர்வை தவிர்த்திட முடியும்.

அரசு ஊழியர்களுக்கு கொடுத்தல். *நீங்கள் சமீபத்தில் தான் ஒரு கட்டுமான அனுமதி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்துள்ளீர்கள். இதனுடன் தொடர்புடைய அரசு முகமை இதனை விடுமுறைக்காலத்தில் தான் மதிப்பிடும் - இந்த காலகட்டத்தில் நீங்கள் உங்கள் தொடர்புகள் அனைவருக்கும் பழக்கூடைகள் கொடுக்கத் திட்டமிடுகிறீர்கள். அருமையான நேரமிது, சரிதானே?* தவறு. அரசு அதிகாரிகளுக்கும், அவர்கள் உறவினர்களுக்கும் கூட நாம் எதை கொடுக்கிறோம், கொடுக்க முன்வருகிறோம் என்பதற்கு விதிமுறைகள் மிகவும் கண்டிப்பானவையாகும். எந்த மதிப்பிலாவது உள்ள எதையும் நீங்கள் எதைக் கொடுக்க முன்வருவதற்கு முன்பாக, நமது கொள்கையைப் பார்த்துத் தெரிந்து கொண்டு, அங்கீகாரம் பெறுங்கள். இலஞ்சம் கொடுக்கும் எண்ணமில்லை என்றாலும் கூட, உங்கள் பரிசு ஒரு இலஞ்சமாகவே தோன்றலாம்.

## தவறான வழி.

இலஞ்சத்தைப் புரிந்துகொள்ளாமல் இருத்தல். *உங்களுக்குப் பொருள் வழங்குபவர் உங்களை அழைத்து, சில கண்டெய்னர்கள் சுங்கத்துறையால் பிடித்து வைக்கப்பட்டுள்ளன என்று சொல்கிறார், அவர், ஆய்வு செய்வதைத் தவிர்க்க, கொஞ்சம் ரொக்கக் கட்டணம் கொடுக்குமாறு உங்களிடம் பரிந்துரைக்கிறார். இது பொதுவானது தான், அதோடு எல்லோரும் இதைத்தான் செய்கிறார்கள். நீங்கள் ஒரு குழுக் கூட்டத்தை ஏற்பாடு செய்கிறீர்கள், அதில் அனைவரும் அதற்கு சம்மதிக்கிறார்கள். நீங்கள், பொருள் வந்தடைவது தாமதமாகி விடாமல் பார்க்க, பணம் கொடுப்பதை அங்கீகரிக்கிறீர்கள். நேரத்தை மிச்சப்படுத்துவது என்பது எப்போதுமே நல்லது தான், சரிதானே?* இந்த நிலையில் சரியல்ல. இந்தப் பணம் சுங்கத்துறை வழியாக அந்தக் கண்டெய்னர்களைத் துரிதமாக கொண்டுவந்து விடலாம், ஆனால் இது நாம் வர்த்தகம் செய்யும் விதமல்லை. ரொக்கப் பணம் தருமாறு வேண்டுகோள் விடுப்பது தான், அது லஞ்சமாக இருக்கலாம் என்பதற்கான முதல் துப்பு ஆகும். இந்த நடைமுறையை துரிதப்படுத்துவதற்கு அங்கே ஒரு அதிகாரபூர்வக் கட்டணம் அல்லது அங்கீகாரம் இருக்க வேண்டும். அடுத்த நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க, சட்டத்துறையைத் தொடர்பு கொள்ளுங்கள்.




## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### அது லஞ்சமாக இருப்பின், அதை கூறக்கூடாதா?

வணிக முடிவை தூண்டுவதற்காக அளிக்கப்படும் மதிப்புள்ள எதுவும் லஞ்சம் என்று கருதப்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உதாரணங்கள் ஆவன:

- சிறப்புத் தள்ளுபடி
- விளையாட்டு நிகழ்ச்சிக்கான டிக்கெட்டுகள்
- விலை அதிகமுள்ள உணவகத்தில் உணவு
- வேலைவாய்ப்பு அளித்தல் அல்லது பயிற்சி
- ரொக்கத்தை போன்றது (பரிசு அட்டை அல்லது கடன் போன்றவை)
- தொண்டு நிறுவனத்திற்கான நன்கொடை

உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்: ஆதரவான வாணிப முடிவிற்கு பரிகாரமாக யாரேனும் வழங்குகிறார்களா அல்லது கேட்கிறார்களா? அதற்கான பதில் "ஆம்" என்றால், உங்களது பதில், "இல்லை, நன்றி" என்று இருக்க வேண்டும்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்

# குற்றத்தை எதிர்த்துப் போராடுதல்

## இலக்கு

குற்றங்களுக்கு எதிராக போராடுவதன் மூலமாக, நமது நிறுவனம், பொருளாதாரங்கள் மற்றும் சமூகங்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

பண மோசடியைத் தவிர்ப்பதன் மூலமாகவே நாம் குற்றத்திற்கு எதிராகப் போராடுகிறோம், இது (நம்மைப் போன்ற) சட்டபூர்வமான வர்த்தகத்தின் வாயிலாக, சட்டவிரோதமான செயல்பாடுகளைச் செய்வதிலிருந்து கிடைக்கும் பணத்தை குற்றச்செயல் புரிபவர்கள் இடமாற்றும் போதே நடைபெறுகிறது. அவர்கள் லட்சியமே, அவர்களுக்குப் பணம் வரும் மூலத்தை மறைப்பதேயாகும், அவ்வகையில் அவர்கள் தண்டனையைத் தவிர்த்து, அவர்களது கெட்ட நடத்தையை தொடர முடிகிறது.

நாம் - குறிப்பாக பரிவர்த்தனையில் ரொக்கத் தொகை ஈடுபடும் போது - நல்ல முடிவை உபயோகிப்பதன் வாயிலாகவும், நமது வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்வதன் வாயிலாகவும், நமக்குப் பொருள் வழங்குபவர்களோடு பணியாற்றும் போது உன்னிப்பாகக் கவனம் செலுத்துவதன் மூலமாகவுமே குற்றத்தை எதிர்த்துப் போராடுகிறோம். விழிப்புடன் இருந்து ஏதேனும் ஒன்று சந்தேகத்திற்குரியதாகத் தெரியும் போது, மனம் திறந்து பேசுவதன் வாயிலாக, நாம் பண மோசடியைத் தவிர்த்து, நம்மைச் சுற்றியுள்ளவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவுகிறோம்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

**அடையாளங்களைத் தெரிந்து கொள்ளுதல்.** *உங்கள் வாடிக்கையாளர்களில் ஒருவர் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகமாகப் பணம் கொடுத்து விட்டார். அவர்கள் இதற்கு முன்பும் பலமுறை இப்படிச் செய்திருக்கிறார். நீங்கள் அதைப் பற்றி கேட்கும் போது, அடுத்த ஆர்டருக்கு இந்த பணத்தை பற்று வைக்குமாறு உங்களிடம் சொல்கிறார். அது உங்களுக்கு தர்மசங்கடமாக இருக்கிறது, ஆகவே, நீங்கள் உங்கள் மேலாளரிடம் அது பற்றித் தெரிவிக்கிறீர்கள். சரியான தேர்வு?* நிச்சயமாக. இது ஒரு நேர்மையான தவறாக இருக்கலாம், ஆனால் இதைப் பாதுகாப்பாகக் கையாளுவதே மிகச் சிறந்தது. அதிகமாகப் பணம் செலுத்துவது, பணமோசடிக்கானதோர் அடையாளமாக இருக்கலாம். வழிகாட்டுதலைக் கோருவதன் மூலமாக, நீங்கள் சரியான காரியத்தைச் செய்தீர்கள்.

### எச்சரிக்கை.

> எது சரியானதோ அதை நாம் செய்வோம் மற்றும் நாம் பொறுப்பாவோம்.

**கேள்விகளைக் கேட்டல்.** *உங்களுக்கு ஓரளவிற்கு நன்றாகத் தெரிந்த வாடிக்கையாளர் ஒருவர், சில பழுதடைந்த பொருட்களை வாங்க ஆர்வம் காட்டுகிறார். இதை தொடர்வது சரியா?* ஒருவேளை சரியாக இருக்கலாம், ஆனாலும் உங்கள் வாடிக்கையாளரையும், அவர் நமது பொருட்களை எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்வது முக்கியமானதாகும். சில நிறுவனங்கள், குறைபாடுள்ள பொருட்களை கழிவுப்பொருளாக வாங்கி, பழுதுகள் அப்பொருட்களைச் சட்டவிரோதமானவையாக்கி விடுகின்றன என்பது தெரிந்தும் கூட, அவற்றை சந்தையில் விற்கிறார்கள். நமது தயாரிப்புகளைத் தவறாக பயன்படுத்தி விடுவதையும், மற்றவகை குற்றவியல் செயல்களையும் தவிர்த்திட, அந்த மற்ற தரப்பினர் இவ்விதமானவரா என உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்:

- ரொக்கமாகப் பணம் செலுத்த முயற்சிக்கிறார்
- விலைப்பட்டியில் காண்பித்துள்ளதைத் தவிர்த்து, வேறுவிதமான நாணயத்தில் பணம் செலுத்துகிறார்
- பணம் எங்கிருந்து வந்ததோ, அதைத் தவிர்த்து வேறு நாட்டிற்குப் பொருளை அனுப்புமாறு வேண்டுகிறார்
- பதிவேடுகளைப் பராமரிக்கும் தேவைகளை தவிர்க்க முயற்சிக்கிறார்
- பரிவர்த்தனைக்குச் சம்பந்தம் இல்லாத ஒருவரை வைத்துப் பணம் செலுத்த வைக்கிறார்
- அவர்களது பரிவர்த்தனை செய்யும் விதத்தை மிகக்கடுமையாக மாற்றுகிறார்

இக்கேள்விகள் எதற்கும் நீங்கள் "ஆம்" எனப் பதிலளித்தால், உங்கள் மேலாளர் ஒருவரிடம் பேசுங்கள், அல்லது வர்த்தக இணக்கத் துறையிடம் பேசுங்கள். இவை அனைத்துமே பணமோசடியாக இருக்கத்தக்கவற்றின் அடையாளங்களாகும், ஆகவே அவற்றைக் குறித்து நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

## தவறான வழி.

அமைதியாக இருத்தல். *சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் வினியோகஸ்தர் ஒருவருக்காக, மூன்றாம் தரப்பினர் ஒருவர் பணம் செலுத்துகிறார். நீங்கள் இழப்பை ஏற்படுத்த விரும்புவதில்லை, ஆகவே நீங்கள் பணப்பட்டுவாடாவை ஏற்றுக்கொள்கிறீர்கள். நீங்கள் இதற்குக் கவலைப்பட வேண்டுமா?* ஆமாம். சம்பந்தம் இல்லாத தரப்பினர் பணம் செலுத்துவது சந்தேகத்திற்குரியதாகத் தோன்றுகிறது. விவரங்களுக்கு அந்த விநியோகஸ்தரைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு இன்னமும் ஐயங்கள் இருந்தால், அதை அறிவித்திடுங்கள். நம்மால் இந்த நிறுவனத்துடன் வியாபாரம் செய்ய முடியும் என்பதையும், அவர்கள் எப்போதும் நாணயம் நாணயத்திற்கான நம்முடைய உறுதிப்பாட்டுக்கு இணங்கி செயல்படுகிறார்கள் என்பதையும் நீங்கள் உறுதி செய்திட வேண்டும்.

## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### மேலும் ஏதாவது அறிந்து கொள்ள விரும்புகிறீர்களா?

ஆம், எப்போதும் மதிப்பான பொருள் வழங்குபவர்கள் மற்றும் இதர தரப்பினர்களை தேர்வு செய்து, வங்கி உரிமையை சரிபார்த்து, உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருப்பின், கேளுங்கள்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்



# நேர்மையாகப் போட்டியிடுதல்

## இலக்கு

நாமாகவே வெற்றி கொள்ளுதல் மற்றும் நியாயமாக வெற்றி கொள்ளுதல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

தடையற்ற நியாயமான போட்டி, சந்தையை செழித்து வளரச் செய்கிறோம் என்றே நாங்கள் நம்புகிறோம். அது, நமது தொழிற்துறையில் - புதுமையான பொருட்கள் மற்றும் சேவைகள் மற்றும் வியாபாரத்தைச் செய்வதற்கான புதிய வழிகள் போன்ற - முன்னேற்றங்கள் ஏற்படவும் வழிவகுக்கிறது, இது நமது வாடிக்கையாளர்களை மகிழ்ச்சியடையச் செய்கிறது.

ஆகவே, நியாயமான போட்டி என்று நாம் சொல்லும் போது, நாம் என்ன பொருள் கொள்கிறோம்? நம்மைப் பொருத்த வரையில், அது எல்லாமே நேர்மையாகவும், அறநெறிக்குட்பட்டும் பணியாற்றுவதாகும். நாம் முன்னேறிச் செல்வதற்காக, (நமது போட்டியாளர்கள் குறித்துப் பொய் சொல்ல முயற்சித்தல் அல்லது புதிய நிறுவனங்களைச் சந்தையிலிருந்து வெளியே துரத்திவிட முயற்சித்தல் போன்ற) நெறியற்ற பழக்கவழக்கங்களில் ஈடுபடுவதில்லை. மாறாக, நமது வெற்றியை நமது தயாரிப்புகளிலும் சேவைகளிலும் இருக்கிற தரமே உந்தித் தள்ள விடுகிறோம் - இது மிகையும் இல்லை, குறைவும் இல்லை. நியாயமற்ற போட்டிப் பழக்கவழக்கங்கள் தோன்றுவதைக் கூட நாங்கள் தவிர்த்து விடுகிறோம்.

> நியாயமான போட்டியே வாணிபத்தின் வெற்றிக்கான அடிப்படை காரணம் என்று நாங்கள் நம்புகிறோம்.

## நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

முறையற்ற ஒப்பந்தங்களை தவிர்த்தல். *போட்டி நிறுவனம் ஒன்று உங்களிடம் விற்பனையில் தேக்கநிலை ஏற்பட்டு இருப்பதாகச் சொல்லி, உங்களது விலைகளையும் அதிகரிக்கச் சொல்கிறது. இது முறையற்றது என்று உங்களுக்கு தெரியும், ஆகவே நீங்கள் அவர்களிடம் பேசுவதை நிறுத்தி விட்டு, அந்த உறையாடலை உடனடியாக அறிவிக்கிறீர்கள். சாமார்த்தியமான நடவடிக்கை?* ஆம். நாம் சரியான வழியில் – நேர்மையாக, அறநெறிப்படி, மற்றும் எப்போதும் நேர்மையுடன் வெற்றி பெறுகிறோம். இதன் பொருள், நாம் ஒருபோதும் எவ்வித முறையற்ற ஒப்பந்தங்களிலும் நுழையாமல் சுதந்திரமாகச் செயல்படும் சந்தைக்கு மதிப்பளிக்கிறோம் என்பதேயாகும். நீங்கள் இது தொடர்பாக தொடர்ந்து பேச விரும்பவில்லை என்பதைத் தெளிவாக்கி, உரையாடலை முடித்துக் கொண்டு, பின் சட்டத்துறையை உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

மற்றவர்களுடைய உரிமைகளை மதித்தல். *நம்முடைய 'பொருள் தயாரிப்பு மேம்பாட்டுக் குழு' போட்டி நிறுவனம் ஒன்று சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ள புதிய தயாரிப்பு ஒன்றின் சிறப்பு அம்சங்களைப் பார்த்து அதைப்போலவே ஒன்றை உருவாக்கத் திட்டமிடுகிறது என்பது உங்களுக்குத் தெரிகிறது. ஒன்றைப் பார்த்து இன்னொன்றைச் செய்வதென்பது எப்போதுமே மோசமான விஷயமல்ல, ஆனால், நம்முடைய புதிய தயாரிப்புத் திட்டங்கள் குறித்து சட்டத்துறைக்குத் தெரிந்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள், அவ்வகையில், நம்மால் அதே சிறப்பம்சங்களைக் கொடுக்க முடியாமல் போகும் என்று அர்த்தமானாலும் கூட, நாம் போட்டி நிறுவனத்தின் காப்புரிமைகளை மீறுவதைத் தவிர்த்திட முடியும். சரியான காரியம் தானே?* நிச்சயமாக. மற்றவர்களிடம் செல்லுபடியாகிறதும், அமல்படுத்தத்தக்க அறிவுசார் சொத்துரிமைகளை நாம் மதிக்கிறோம், அதில் காப்புரிமை, வர்த்தகக்குறிகள், பதிப்புரிமைகள், மற்றும் வர்த்தக இரகசியங்கள் ஆகியவை அடங்குகின்றன. புதிய தயாரிப்புகளையும், புதிய அம்சங்களையும், புதிய பிராண்டுகளையும் அறிமுகம் செய்யும் போது, சட்டத்துறையை ஈடுபடுத்திக் கொள்வதை உறுதி செய்யுங்கள்.

## எச்சரிக்கை.

போட்டித் தகவல்களைத் திரட்டுதல். *தயாரிப்பு ஒன்றை அறிமுகம் செய்வதற்குத் தயாராவதற்காக, நீங்கள் சில போட்டிப் புலனாய்வுத் தகவல்களைத் திரட்ட வேண்டியுள்ளது. அது சரிதானா?* ஆமாம், போட்டியாளர் தகவல்களைத் திரட்டுவதற்கு ஊக்கமளிக்கப்படுகிறது, ஆனால் அதையும் சரியான வழியில் செய்தாக வேண்டும். நீங்கள் நேர்மையான முறைகளையும், பொது மூலங்களில் இருந்து பெற்ற ஆவணத்தையும் மட்டுமே உபயோகிக்கிறீர்கள் என்பதை உறுதி செய்யுங்கள்.

போட்டியாளர்களிடமிருந்து ஆட்களை பணிக்குஅமர்த்துதல். *உங்கள் குழுவில் ஒரு பணியிடம் காலியாக உள்ளது, உங்கள் போட்டியாளரிடமிருந்து வருகிற, ஏராளமான தொழிற்துறை அனுபவம் உள்ள ஒருவர் இருக்கிறார். அவரைப் பணிக்கு அமர்த்தலாமா?* ஒருவேளை அமர்த்தலாம். நாம், பல்வேறு தொழில்துறை அல்லது தொழில்நுட்பத்துறையில் அனுபவமும், அறிவும் பெற்றவர்களை பணியமர்த்திக் கொள்ளலாம் என்ற போதிலும், நாம் மற்றவர்களின் வர்த்தக இரகசியங்கள் மற்றும் நுட்பமான தகவல்களை பெறுவதற்கான ஒரு பொருளாக ஆட்களைப் பணியமர்த்துவதில்லை. ஆபத்துக்களைப் புரிந்து கொள்ளவும், குழு உறுப்பினர்கள் அவர்களை முன்னர் பணியமர்த்திய நிறுவனத்தின் இரகசியத் தகவல்களை வெளிச்சொல்லாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன் வைக்கவும் மனித வளத்துறையினரோடு பணியாற்றுங்கள்.

## தவறான வழி.

போட்டி போடுவது குறித்த நுட்பமான தகவல்களைப் பாதுகாத்தல். *போட்டி நிறுவனம் ஒன்றுக்காகப் பணியாற்றுகிற நண்பர் ஒருவருடன் நீங்கள் இரவு விருந்து அருந்துகிறீர்கள். உங்கள் இருவராலும் விற்பனை இலக்குகளை நிவிர்த்தி செய்ய முடிகிற வகையில், வியாபார வியூகங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு அவர்கள் ஆலோசனையளிக்கிறார்கள். நண்பனுக்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம், சரிதானே?* இல்லை. போட்டி போடும் வகையிலான நுட்பமான தகவல்களை நாங்கள் பேணிக்காக்கிறோம், அதோடு அனுமதியின்றியும், முறையான பாதுகாப்பின்றியும் யாருடனும் நாம் அவற்றைப் பகிர்ந்து கொள்வதில்லை.

## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### எந்த கலந்துரையாடலை நான் தவிர்க்க வேண்டும்?

போட்டியாளர்களுடன் குறுகிய மற்றும் பொதுவான, பருவகாலம் மற்றும் விளையாட்டு போன்றவை குறித்து கலந்துரையாடலமே, அன்றி வர்த்தகம் குறித்து அல்ல. விலை, உற்பத்தி, விற்பனை, கண்டுபிடிப்புகள், உற்பத்தி வளர்ச்சி, விற்பனை எல்லைகள், இலக்குகள் அல்லது இதர பாரம்பரிய அல்லது ரகசியத் தகவல்கள் குறித்து பேசினால், கலந்துரையாடலை முடித்து, வெளியேறுங்கள்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்



# நலன் முரண்பாடுகளைத் தவிர்த்தல்

## இலக்கு

வசப்படுத்துதலைத் தவிர்த்தல் (அல்லது அதுபோன்ற தோற்றத்தைக்கூட).

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

நாம் அதை எதிர்கொள்வோம், நாம் அனைவருக்கும் நமது பணிக்கு அப்பால் நலன்களும் உறவுகளும் இருக்கின்றன. ஆனால், நமது இத்தனிப்பட்ட நலன்கள் நமது வர்த்தக முடிவுகளைப் பாதிக்கும் போது, அது சேதமேற்படுத்துவதாக இருந்து விடக்கூடும். இதைத் தான் நாம் நலன் முரண்பாடு என்கிறோம். ஒரு நலன் முரண்பாடானது, உங்களுடைய, மற்றும் நிறுவனத்துடைய நற்பெயருக்குக் கேடு விளைவித்திடலாம்.

ஒரு குழுவாக முன்னேறிச் செல்ல, நாம் ஓரணியாகப் பாடுபட வேண்டியுள்ளது. முரண்களைக் களைவதை முடுக்கி விடவும், எப்போதுமே Tenneco நிறுவன நலனுக்காகச் செயல்படவும், நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பங்கினைச் செய்வோமாக. குறிக்கோளுடையவையும், ஆதிக்கம் செலுத்தாதவையுமான முடிவுகளையே நாம் எடுக்கிறோம். நலன் முரண்பாடுகள் என்றால் என்ன, அவை எப்போது ஏற்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்வதே, அவற்றை தவிர்ப்பதற்கு மிக முக்கியமானவையாகும். உங்கள் முடிவில் ஏதோ ஆதிக்கம் செலுத்துகிறது என்பதாகத் தெரிகிற எதையும் தவிர்ப்பதே மிகச் சிறந்ததாகும்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

முரண் ஒன்றைப் புரிந்துணர்தல். *உங்கள் சகோதரர் மகள் உங்களுடைய உதவியாளராக பணியாற்ற விரும்புகிறார். அவர் கல்வித் தகுதியுடையவர் என்பது உங்களுக்குத் தெரியும், ஆனாலும் அவரிடம், அது ஒருதலைப் பட்சமானதாகத் தெரியும், அது இக்குழுவிற்கு மோசமானது என்று சொல்லுங்கள். அதற்குப் பதிலாக, மற்ற துறைகளில் இருக்கும் வேலை வாய்ப்புகள் பற்றிச் சொல்லுங்கள். சரியான பதில் தானே?* ஆம். ஏற்பட வாய்ப்புள்ள முரண்களைப் புரிந்துணர்ந்து கொள்ளுங்கள், அதோடு உறவினர் ஒருவரை மேற்பார்வை செய்வது அல்லது அவர்களோடு வியாபாரம் செய்வது இந்த வகையிலேயே வருகிறது.



## எச்சரிக்கை.

முரண்களை வெளித்தெரிவித்தல். *போட்டியாளர் ஒருவர் உங்களிடம், உங்கள் மனைவி அவர்கள் நிறுவனத்தில் வேலைக்கு சேர சம்மதித்துள்ளார் என்று அறிவிக்கிறார். இது கொண்டாட வேண்டிய நேரம், சரிதானே?* அனேகமாக. இது முரணை ஏற்படுத்தக்கூடியதாகும். நீங்கள் அந்தக் கொண்டாட்ட விருந்தை உண்பதற்கு முன்பே, அவரது பதவியைக் குறித்து உங்கள் நிறுவனத்திற்குத் தெரிவிப்பதைப் பாருங்கள்.

## தவறான வழி.

முரண்களை வெளித்தெரிவிக்காமல் இருத்தல். *உங்களுடைய மேலாளர் நமக்குப் பொருள் வழங்கும் நிறுவனத்தின் இயக்குநர் வாரியத்தில் இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரிய வருகிறது. நீங்கள் இது பற்றி உங்கள் மேலாளரிடம் கேட்கும் போது, அது பற்றி கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை என்கிறார். நீங்கள் எதுவும் சொல்ல வேண்டியுள்ளதா?* ஆமாம். நீங்கள் உங்கள் மேலாளரிடம், நலன் முரண்பாடு படிவத்தைப் பூர்த்தி செய்து அதை மனித வளங்கள் துறையிடம் கொடுக்குமாறு நினைவுபடுத்தலாம். கட்டுப்பாடுகள் அவசியமாகலாம். உதாரணத்திற்கு, உங்கள் மேலாளர் அந்தப் பொருள் வழங்குபவருக்கான ஏல நடைமுறைகள், தெரிவு செய்தல் அல்லது பணப்பட்டுவாடா நடைமுறையில் ஈடுபடக்கூடாது.



## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### “ஆதாய முரண்” எப்படி தோற்றமளிக்கும்?

பல்வேறு சூழல்களில் நடந்திடக் கூடும், அவற்றில் சில உதாரணங்கள்:

- போட்டியாளருக்காக பணிபுரிதல்
- பொருள் வழங்குபவரிடமிருந்து பரிசு, கேளிக்கை அல்லது சுற்றுலா பெறுதல்
- நமது விற்பனையாளர்களில் ஒருவரிடம் நிதி முதலீடு
- நண்பர் அல்லது காதலியுடனான நேரடியான அல்லது மறைமுக தகவல் அளிக்கும் உறவு
- “ஒரு பக்கத்தில்” வாடிக்கையாளருக்காக ஆலோசனை பணி மேற்கொள்ளல்
- வாடிக்கையாளர் அல்லது பொருள் வழங்குபவரிடம் உங்கள் உறவினர் பணிபுரிதல் அல்லது நிர்வாக இயக்குநர்கள் குழுவில் இருத்தல்

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்

# பரிசுகள், கேளிக்கை மற்றும் விருந்தோம்பல் பரிமாறிக்கொள்ளுதல்

## இலக்கு

ஏற்றதாக இல்லாத எதையும் ஒருபோதும் கொடுக்காமல் அல்லது பெறாமல் இருத்தல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

எப்போதாவது ஓர் பரிசைக் கொடுப்பது அல்லது பொழுதுபோக்கிற்கு அல்லது விருந்தோம்பலுக்கு அழைப்பதென்பது, சாதாரணமாக வர்த்தகம் செய்வதன் ஓர் அங்கமாக இருக்கலாம். ஆனால் சில நேரங்களில் பரிசுகள் அல்லது பிற சலுகைகள் வரம்பு மீறலாம். இதுபோன்றதோர் சலுகையை ஒருபோதும் கொடுக்கவோ அல்லது ஏற்கவோ செய்யாதீர்கள்:

- பதிலுக்கு திருப்பிச் செய்ய வேண்டியதோர் கடமையை உருவாக்குகிறது அல்லது அனுகூலத்தைப் பெறக் கொடுக்கப்படுகிறது
- ரொக்கம் அல்லது பரிசு அட்டை போன்ற ரொக்கத்திற்குச் சமமான ஒன்றின் வடிவில் வருகிறது
- அந்தச் சூழ்நிலைகளின் கீழ் அது அளவிற்கதிகமானதாக இருக்கிறது அல்லது மற்றவர்கள் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதாக நினைக்கச் செய்கிறது.

சில நேரங்களில், எப்போது ஒரு சலுகை ஏற்புடையது என்பதைத் தெரிந்து கொள்வது சிரமமானதாக இருக்கலாம், அதனால் தான் நம்மிடம் வழிகாட்டுதல்களை வைத்துள்ளோம். நீங்கள் விதிகளைப் பின்பற்றுவதையும், பிரத்தியேகக் கட்டுபாடுகள் எவையும் இருந்தால் அவற்றைத் தெரிந்திருப்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள். உதாரணமாக, அரசு அதிகாரி ஒருவருக்கு மதிப்புமிக்க ***எதையும்*** கொடுப்பதை, ஒரு சட்ட விரோத இலஞ்சமாகப் பார்க்கலாம், ஆகவே அதற்கு சட்ட துறையின் ஒப்புதல் தேவையாகிறது. செய்ய வேண்டிய சரியான காரியம் தெளிவாக இல்லாவிட்டால் எப்போதுமே உதவி கோருங்கள். நீங்கள் ஒரு பரிசினை ஏற்றுக் கொண்டால், நீங்கள் அதை அறிவித்தாகவும் வேண்டும்.

## நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

"வேண்டாம்" என்று சொல்லல். *உங்களுக்கும் உங்கள் துணைவிக்குமான, FIFA உலககோப்பை கால்பந்து போட்டி நுழைவுச் சீட்டுகள் வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து உங்களுக்கு வருகின்றன. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது உங்களுக்கு தெரியும், ஆகவே அவற்றைத் திருப்பிக் கொடுத்துவிட்டு பொறுமையாக நமது கொள்கையை விளக்கிச் சொல்கிறீர்கள். அருமையான செய்கை தானே?* ஆம். நல்ல முடிவை உபயோகியுங்கள், எப்போதும் நாணயத்தோடு செயல்படுங்கள், முறையற்றது என நீங்கள் நினைக்கிற அல்லது உங்களுக்குத் தெரிகிற எந்தச் சலுகையையும் நிராகரித்து விடுங்கள்.

## எச்சரிக்கை.

அவர்களது கொள்கைகளை மதித்தல். *விடுமுறை நாட்கள் வருகின்றன, அதோடு நீங்கள் வாடிக்கையாளர் ஒருவருக்கு 50$ (3500 INR) மதிப்புள்ள பரிசு ஒன்றை அனுப்பி வைக்க விரும்புகிறீர்கள். இது சரியானதாகத் தான் இருக்க வேண்டும், இல்லையா?* அது சூழலைப் பொறுத்தது. சில நேரங்களில் வாடிக்கையாளர்களுக்குக் கண்டிப்பான விதிமுறைகள் இருக்கலாம், அதோடு பரிசுகளை அனுமதிக்காமல் இருக்கலாம். உங்கள் வாடிக்கையாளர் தர்மசங்கடமாக உணர்ந்து, உங்கள் பரிசு காரணமாக பிரச்சினையில் அகப்பட்டுக் கொள்வதை நீங்கள் விரும்பமாட்டீர்கள். அதோடு, நமது ஒப்பந்தங்களுக்கும் வழக்கமாக அவர்களது விதிகளை மதிப்பது அவசியமாகிறது. இத்தகைய சூழல்களில், விடுமுறை காலத்தின் போது உங்கள் உறவுகளை வளர்த்துக் கொள்ள - பண்டிகைக்கால இமெயில் போல - இன்னொரு வழியைக் கண்டுபிடியுங்கள்.

## தவறான வழி.

அரசு அதிகாரிகளுக்குக் கொடுத்தல். *வர்த்தக கண்காட்சி ஒன்றுக்குப் பிறகு நீங்கள் அரசு அதிகாரி ஒருவரைப் போய்ப் பார்க்கிறீர்கள். நீங்கள் இருவரும் லாஸ் வேகாஸ் மீதுள்ள மோகம் பற்றிப் பேசுகிறீர்கள், உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வத்தில், நமது நிறுவனம் அவரை ஒரு வார விடுமுறை பயணத்திற்கு அனுப்பி வைக்கலாம் என்று சொல்கிறீர்கள். இது நாம் நமது போட்டியாளர்களிடம் இருந்து தனித்து நிற்க உதகிறது, சரிதானே?* ஆமாம், ஆனால் சரியான வழியில் அல்லவே. அரசு அதிகாரிகளுக்குப் பரிசுகள் கொடுப்பதற்கென கண்டிப்பான விதிமுறைகள் உள்ளன, அதோடு இது மிகவும் ஆடம்பரமான சலுகையாகும். நாம் இப்போதே திருத்த நடவடிக்கையை எடுக்க முடிகிற வகையில், நீங்கள் சட்டத் துறையில் உள்ள யாருடனாவது பேச வேண்டியுள்ளது.



## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### எவ்வகையான பரிசுகளை ஏற்றுக் கொள்ளலாம்?

அளிக்கப்பட்ட அல்லது பெறப்பட்டபரிசுகள் அல்லது கேளிக்கை:

- அது சட்டப்படி ஏற்கக்கூடியதாக இருக்க வேண்டும்
- அது துல்லியமாக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்
- தொடர்ச்சியாக இல்லாமல் மதிப்பு குறைவாக இருக்க வேண்டும்
- நியாயமான வணிக நோக்கத்தை கொண்டிருக்க வேண்டும்
- தொழிற்சாலை மற்றும் இருப்பிடம் அடிப்படையில் எது ஏற்கக்கூடியதோ அத்துடன் ஒத்துப்போக வேண்டும்
- அளிப்பவர் மற்றும் பெறுபவருக்கான கொள்கைகளுக்கு மதிப்பளியுங்கள்
- Tennecoவிற்கு இழுக்கு அல்லது சங்கடத்தை ஏற்படுவதாக இருக்கக் கூடாது
- அது ரொக்கம், பரிசு அட்டை, காசோலை, கடன் அல்லது பங்காக இருக்கக் கூடாது
- எப்போதும் உங்களை அல்லது Tennecoவை சமரச நிலைக்கு உள்ளாக்காதீர்கள்

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்

# சர்வதேச அளவில் வர்த்தகம் செய்வது

## இலக்கு

நமது பொருட்களும், ஆட்களும் உலகெங்கும் பயணிக்கையில் மரியாதையைச் சம்பாதித்தல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

சர்வதேச அளவில் வர்த்தகம் புரிவது என்பது ஒரு சுதந்திரமாகும் - இது நமது வர்த்தகத்திற்குப் பல ஆச்சரியமான புதிய பாதைகளைத் தருகிறதும், நமது வாடிக்கையாளருக்களுக்கு புதிய சலுகைகளைத் தருகிறதுமானதாகும். நாம், இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் வணிக இணக்கச் சட்டங்களை பின்பற்றுவதன் மூலமாக, இத்தகைய அனுகூலங்களைக் கடைபிடிக்கக் கடுமையாகப் பாடுபடுகிறோம்.

தேவையாக இருப்பவற்றின் உச்சத்தில் நிலைத்திருக்கவும், நமது வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறந்தவற்றை வழங்கவும் நாம் அனைவரும் நம் பங்கை ஆற்றுவோமாக. ஒரு தவறான முடிவு அல்லது தவறு, நாம் நம் பொருட்களை உலகெங்கும் விநியோகிக்கும் சந்தர்ப்பத்தினை இழக்க வைத்துவிடலாம்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

சர்வதேச விதிமுறைகளை மதித்தல். *புதிய நாடு ஒன்றில் நீங்கள் உங்கள் பொருட்களை விற்க ஆரம்பிக்க விரும்புகிறீர்கள், ஆனால் அந்த நாட்டின் சட்டங்களைப் புரிந்து கொள்வது சிரமமாக உள்ளது. உதவிக்கு நீங்கள் சட்டத் துறையை தொடர்பு கொள்கிறீர்கள். சரியான தேர்வு?* நிச்சயமாக. சர்வதேச அளவில் வர்த்தகம் செய்வது, குறிப்பாக, நீங்கள் பின்பற்றுவதற்குப் பல வகை சட்டதிட்டங்கள் இருக்கையில், சிக்கலான ஒன்றாக ஆகிவிடலாம். நீங்கள், நமது தயாரிப்புகள், மேற்சீட்டு இடுதல், மற்றும் செயல்பாடுகள் இணக்கமாக இருக்கின்றன என்பதைப் பார்த்துக் கொள்வதற்காக, பொருள் தேவைகள் குறித்து ஆராய்ச்சி செய்து, அந்த நாட்டிற்கான சட்டங்களைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கும். அதிர்ஷ்டவசமாக, உங்களுக்கு உதவ உங்களுக்கென முழுமையான சட்ட மற்றும் கூட்டாண்மை நிறுவனக் குழு உள்ளது.

### எச்சரிக்கை.

ஏற்றுமதியை முறையாக கையாளுதல். *நீங்கள் புதிய பொருள் ஒன்றை ஏற்றுமதி செய்து, தேவையான அனைத்து காகித வேலைகளையும் அதில் சேர்த்திருக்கிறீர்கள் என்பதை உறுதிசெய்ய விரும்புகிறீர்கள். நீங்கள் சரிபார்க்கிறீர்கள், அது அனைத்தும் அதில் இருக்கிறது. ஏற்றுமதிக்கு தயார் தானே?* கிட்டத்தட்ட. ஒவ்வொரு உருப்படியையும் சரியாக வகைப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை உறுதி செய்ய உங்கள் வர்த்தக இணக்கக் குழுவில் கேட்டுப் பாருங்கள், அந்தப் பொருளை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கிறார்கள் என்பதை உறுதி செய்ய ஒன்றுக்கு இருமுறை சரிபாருங்கள். இது சிக்கலானதாக இருந்திட முடியும், அதோடு இதற்கு, ஏற்றுமதித் தேவைகளைப் புரிந்து கொள்வது, சென்று சேருமிடம் தடைவிதிக்கப்பட்டுள்ள நாடல்ல என்பதைச் சரிபார்ப்பது, மற்றும் அந்தத் தயாரிப்பையும், அதை யார் உபயோகிப்பார்கள் என்பதையும் தெரிந்து கொள்வது போன்ற விவரங்களுக்கு கவனம் செலுத்துவது அவசியமாகிறது.

வர்த்தக சந்தர்ப்பங்களை மதிப்பிடல். *நாம் இதற்கு முன் ஒருபோதும் வர்த்தகம் புரிந்திராத ஒரு நாட்டில் உள்ளதோர் நிறுவனத்தோடு வியாபாரம் செய்ய நீங்கள் பரிசீலனை செய்கிறீர்கள். அவர்கள் புகழ்பெற்றவர்கள் தான் என்பதை உறுதி செய்துகொள்ள நீங்கள் சிறிது ஆராய்ச்சி செய்ய வேண்டும். முன்னெடுத்துச் செல்லத் தயாரா?* கொஞ்சம் அப்படியல்ல. வர்த்தகம் செய்ய நமக்கு அனுமதியில்லாத சில நாடுகள் இருக்கத்தான் செய்கின்றன, அதோடு அவை அரசியலைப் பொருத்து மாறுகிறது. தடைவிதிக்கப்பட்ட நாடுகளின் குறித்த சமீபத்திய பட்டியலுக்கு நமது கொள்கையைப் பாருங்கள். இது, சிறைதண்டனை, அபராதங்கள், அல்லது ஏற்றுமதி செய்யும் திறனை இழத்தல் போன்றவற்றைத் தவிர்க்க உதவுகிறது. நீங்கள், நமது விற்பனையாளர் நமது முக்கிய மதிப்பீடுகளைப் பின்பற்றி, நிறுவனத் தகவல்களைப் பேணிக்காத்து, இலஞ்சத்தைத் தவிர்த்து, போட்டியாளர்களோடு முறையாகப் பணியாற்றுவார்கள் என்பதை உறுதி செய்து கொள்ள, நமது விற்பனையாளர் தகுதிகாணும் நடைமுறையையும் பின்பற்ற வேண்டியிருக்கிறது.

> அனைத்து பொருத்தமான வர்த்தக சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளை நாங்கள் கடைபிடிக்கிறோம்.



## தவறான வழி.


*தடைகளை அலட்சியம் செய்தல். சில பொருட்கள் இஸ்ரேலில் இருந்து வரவில்லை எனச் சான்றளிக்குமாறு கேட்டு உங்களுக்கு ஒரு மின்னஞ்சல் வருகிறது, ஏனென்றால் அவற்றை ஈரானுக்குச் செல்கிற வாகனங்களில் சேர்த்து அனுப்புவார்கள். ஈரான் ஒரு தடைவிதிக்கப்பட்ட நாடு என்பதால் நம்மால் அதற்கு பொருட்களை விற்க முடியாது என்பது உங்களுக்கு தெரியும், ஆகவே நீங்கள் அந்த ஆர்டரை நிராகரிக்கும் செய்தியைத் தயார் செய்து, "அனுப்பு" பொத்தானில் தட்டத் தயாராக இருக்கிறீர்கள். தட்டி விடலாமா?* வேண்டாம். நிறுத்துங்கள். நீங்கள் செய்வது சரிதான், ஆனாலும், நீங்கள் செய்ய வேண்டியது இன்னும் இருக்கிறது. தடையொன்று தொடர்பான எந்த வேண்டுகோளையும், அதை நாம் பின்பற்றவில்லை என்றாலும் கூட, நாம் அமெரிக்க அரசாங்கத்திடம் அறிவித்திட வேண்டும். இஸ்ரேல் தொடர்பான அந்தக் கோரிக்கை ஒரு தடை வேண்டுகோளாகவே தகுதிபெறுகிறது. உதவிக்கு உடனடியாக சட்டத்துறையைத் தொடர்பு கொள்ளுங்கள்.

### பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### சர்வதேச அளவில் வர்த்தகம் செய்யும்போது, இவற்றுக்காக, பன்னாட்டு வர்த்தக் குழுவுடன் பணியாற்ற வேண்டும்:

- பன்னாட்டு பரிமாற்றங்களை முழுவதுமாகவும், துல்லியமாகவும் ஆவணப்படுத்தவும்.
- நமது பொருட்களை ஏற்றுமதி அல்லது மறு-ஏற்றுமதி செய்வதற்கு முன்பாக தேவைப்படும் உரிமங்களை பெற வேண்டும்.
- அனைத்து மூன்றாம் தரப்பினரையும், முறையாக சோதனையிடவும்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்




# நமது வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகத்தின் மீது அக்கறை கொள்ளுதல்

நாம் சாதித்திருக்கிற எல்லாவற்றையும் குறித்து நாம் பெருமைப்படுவதைப் போலவே, நாளையத் தினத்தை - நமது வாடிக்கையாளர்கள், நமது நிறுவனம், மற்றும் நமது சமுதாயத்திற்கு - இன்னும் சிறப்பானதாக ஆக்க நாம் எப்போதுமே குறிக்கோள் கொள்கிறோம். திருப்பிக்கொடுப்பதன் மூலமும், அடுத்து என்ன என்பதில் கவனம் செலுத்துவதன் மூலமும் – நாம் நாளைய பிரச்சினைகளை இன்றே தீர்க்கத் தொடர்கிறோம்.

## இந்தப் பிரிவில்:

- பாதுகாப்பான, தரமான பொருட்களை உருவாக்குதல்
- நேர்மையாக விற்பனை செய்தல்
- பொறுப்புடன் தொடர்புக் கொள்ளுதல்
- மனித உரிமைகளை பாதுகாத்தல்
- சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்
- சமூகத்திற்கு திரும்ப அளித்தல்

# பாதுகாப்பான, தரமான பொருட்களை உருவாக்குதல்

## இலக்கு

வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் எப்போதெல்லாம் Tenneco நிறுவனத்தைத் தேடுகிறார்களோ அப்போதெல்லாம், பாதுகாப்பான, உயர்-தரப் பொருட்களை வழங்குதல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

நாம் பொருட்களின் தரம் மற்றும் பாதுகாப்பு குறித்து ஆழமாக அக்கறை கொள்கிறோம், ஆகவே நமது பொருட்கள், நமது சொந்த உள் நியமங்களையும் அதே போல அவற்றை அறிமுகம் செய்கிற நேரத்தில் இருக்கிற சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் அமைக்கிற நியமங்களையும் நிவர்த்தி செய்கின்றன (அல்லது மிஞ்சுகின்றன) என்பதை உறுதி செய்கிறோம்.

தரம் மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதன் மூலம், நாம் வாடிக்கையாளர்கள் நம்பிச் சார்கிற தயாரிப்புகளையும், அவர்கள் நம்ப முடிகிறதோர் பெயரையும் வழங்குகிறோம்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

தரத்திலும், பாதுகாப்பிலும் வலியுறுத்துதல். *சில பொருட்களை சரியான நேரத்தில் ஏற்றுமதி செய்யும் வகையில், தயாரிப்புக்கு முந்தைய ஒப்புதல் நடைமுறையை தவிர்க்கும்படி ஒருவர் உங்களுக்கு யோசனை தருகிறார். நீங்கள் தவிர்க்காவிட்டால், உங்கள் குழு பின் தங்கிவிடும். எப்படியிருந்தாலும் நீங்கள் மனம் திறந்து பேசுங்கள். சரியான தெரிவு தானே?* சரியானது தான். ஒரு காலக்கெடு அல்லது இலக்கை எட்டுவதற்காக நாங்கள் ஒருபோதும் தரத்தைத் தியாகம் செய்வதில்லை. மனம் திறந்து பேசுவதன் மூலமாக, அந்தப் பிரச்சினையைத் திருத்திக் கொள்ள முடியும், அது நமது வாடிக்கையாளர்களையும், நமது நிறுவனத்தையும் பாதுகாக்கும் அதோடு எப்போதும் நாணயத்தோடு செயல்படுவதற்கான நமது உறுதிப்பாட்டை உயர்த்திப் பிடிக்கும்.

### எச்சரிக்கை.

நீங்கள் காண்பதை அறிவித்தல். *முந்தைய பணி நேரம் முடிந்ததைத் தொடர்ந்து எந்திரம் ஒன்றில் சரிபார்ப்புப் பணி எதையும் செய்து முடித்திருக்கவில்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்கிறீர்கள். இயந்திரம் சரியாக வேலை செய்கிறது என்பதை உறுதி செய்ய நீங்கள் மறுபடியும் சரிபார்க்கிறீர்கள். சரியான நடவடிக்கையா?* ஆமாம், ஆனால் இதை உங்கள் மேலாளரிடம் தெரிவிப்பதை உறுதி செய்யுங்கள். உற்பத்தி செய்கிற பொருட்கள் தேவையான குறிப்பீடுகளுக்கு இணங்க இருக்கின்றன என்பதை உறுதி செய்து கொள்வது நிறுவனத்தில் இருக்கும் ஒவ்வொருவரது வேலையாகும் அதோடு நுகர்வோர்களுக்கு நமது தயாரிப்புகள் பாதுகாப்பானவையாக இருக்கின்றன என்பதை உறுதி செய்வதும் முக்கியமானதாகும்.

### தவறான வழி.

வேலையை குறைத்தல். *ஒரு தயாரிப்பில் நாம் செய்து முடிக்கும் பரிசோதனைகள் ஒன்று, உற்பத்தி நடைமுறையில் அடுத்தடுத்த படி கீழே மறுபடியும் செய்யப்படுகிறது என்பதை நீங்கள் புரிந்துணர்ந்து கொள்கிறீர்கள், ஆகவே தயாரிப்பு விரைந்து கொடுக்கப்படுவதற்காக முதல் பரிசோதனையைச் செய்யாமல் விடுகிறீர்கள். புத்திசாலித்தனமான யோசனை?* கிடையாது. தேவையான பரிசோதனை ஒன்றைத் தவிர்ப்பது ஒருபோதும் சரியல்ல. வேலையை வேகமாக செய்வதற்கான யோசனை ஒன்று உங்களிடம் இருந்தால், அதனை பகிர்ந்து கொள்ளுங்கள். ஆனால் உங்கள் யோசனைகளை அங்கீகரிக்கும் வரை, திட்டத்தின் படியே செயல்படுங்கள். இல்லையெனில், நீங்கள் நம் வாடிக்கையாளரின் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்துகிறீர்கள்.

## பாதையை முன்னடத்தி செல்வீர்

(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### தரம் மற்றும் பாதுகாப்பிற்கான கூடுதல் குறிப்புகள்:

- புதிய கட்டுப்பாடுகள் குறித்து விழிப்புடன் இருந்திடவும், தேவைப்படும்போது சான்றினை பெற்றிட வேண்டும்.
- நமது தேவைகளுக்கு ஏற்ற அல்லது மிகுதியானவற்றை அனைத்து விற்பனையாளர்களும் பெற்றுள்ளார்களா என்பதை உறுதி செய்யவும்.
- நமது பொருட்களுக்கான கவனம் மற்றும் பாதுகாப்புப்பை மீறுவது குறித்து ஏதேனும் அச்சுறுதல்களை நீங்கள் உணர்ந்தால் அதனை தெரிவிக்கவும்.

பொருட்களை சேதப்படுத்துவது சாத்தியமான அபாயம் மற்றும் சட்டவிரோதமானது மற்றும் நமது விதிகளின் மீறலாகும். அதன் ஆழத்திற்கு நாம் செல்வது மிக முக்கியமானதாகும்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்



# நேர்மையாக விற்பனை செய்தல்

## இலக்கு

நமது நற்பெயரையும் நமது வர்த்தகப் பெயரையும் கட்டமைத்தல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

நாம் அனைத்தையும் நாணயத்தோடு செய்கிறோம் - இதில் நமது தயாரிப்புகளை விற்பனை செய்தலும், விளம்பரம் செய்தலும் அடங்குகிறது. விளம்பரத்தில் நாணயம் என்றால், நாம் நம் தயாரிப்புகள் சம்பந்தமான துல்லியமான, நியாயமான, சமநிலையான தகவல்களை வழங்குகிறோம் என்பதே அர்த்தமாகும். நமது தயாரிப்புகள் பற்றி நாம் சொல்வது அனைத்தும் உண்மை மற்றும் அவை யதார்த்தத்தினால் தாங்கப்படுபவை என்பதை உறுதி செய்வதன் மூலம், நாம் வாடிக்கையாளர் நம்பிக்கையை உயர்த்தி, நமது வர்த்தகப்பெயரை வலுப்படுத்துகிறோம்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

தயாரிப்புக் கோரிக்கைகளைச் செய்தல். *நீங்கள், நமது புதிய தயாரிப்பு போட்டியாளரின் தயாரிப்பை விட சிறந்தது என்றும், அது போட்டித் தயாரிப்பை விட 20% சிறப்பாக செயல்படுகிறது என்றும் விளம்பரம் செய்ய விரும்புகிறீர்கள். பெரியதோர் வர்த்தகக் கண்காட்சிக்கு முன்னதாக, விளம்பரம் விரைந்து வெளிவர வேண்டும் என்று நீங்கள் விரும்பினாலும் கூட, அந்த விளம்பரத்தை வெளியிடுவதற்கு முன்பாகவே நமது பொறியாளர்களைக் கொண்டு ஒப்பீட்டுப் பரிசோதனையொன்றை நடத்தி முடித்திட நீங்கள் அவகாசம் எடுத்துக் கொள்கிறீர்கள். நல்ல முடிவு தானே?* நிச்சயமாக. நாம் நம் தயாரிப்புகளின் செயல்திறன் பற்றிய தவறான அல்லது மெய்ப்பிக்கப்படாத கோரிக்கைகளை விடுப்பதில்லை. மெய்ப்பிக்கிற கோரிக்கைகளுக்குப் பெரும்பாலும் நியாயமான பரிசோதனைகளை நடத்துவது அவசியமாகிறது, ஆகவே செய்ய விரும்புகிற கோரிக்கையொன்றை மெய்ப்பிக்க எந்த வகையான பரிசோதனை தேவை என்பதைப் புரிந்து கொள்ள சட்டத்துறையுடன் இணைந்து பணியாற்றுங்கள்.

### எச்சரிக்கை.

நமது பெயரைத் தெளிவுபடுத்துதல். *நமது போட்டியாளர் ஒருவர், நமது தயாரிப்புகள் குறித்த உண்மையில்லாத தகவல்களைச் சொல்கிறார். நீங்கள் நமது குழுவினரிடம், இன்னும் துல்லியமானதும், நியாயமானதும், சமநிலையானதுமான தகவலோடு ஒரு விளம்பரத்தை ஏற்பாடு செய்யுமாறு சொல்கிறீர்கள். சரியான நடவடிக்கை தானே?* ஆம், இதைச் சரி செய்வதற்கு இதுவே முக்கியமான தருணமாகும். ஆனால் சட்டத்துறையுடன் பேசுவதை உறுதி செய்யுங்கள். நமது தயாரிப்புகள் பற்றி தவறான தகவல்களைச் சொல்வது நெறிமுறையற்றதாகும், அதற்கு எதிராகப் போராடுவதற்கு நாம் நிறைய பாடுபட வேண்டிவரும்.

> விளம்பரத்தில் உண்மையை உரைப்பதற்காக நாங்கள் விரும்பப்படுகிறோம் ...

## தவறான வழி.

சரிபார்க்காத தகவல்களை வழங்குதல். *நீங்கள் வியாபார அபிவிருத்து விஷயங்களை ஒன்றாகத் திரட்டி, நமது தயாரிப்புகள் ஒன்றில் பலன் கிடைக்க வாய்ப்புள்ள ஒன்றை சிறப்பம்சப்படுத்திக் காட்ட விரும்புகிறீர்கள். அதை இன்னமும் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சியின் மூலம் வலுப்படுத்தவில்லை, ஆனால், ஒரு ஆய்வினைச் செய்து கொண்டிருக்கிறார்கள், அதன் முடிவுகள், இதுவரைக்கும், நன்றாகவே இருந்திருக்கிறது, ஆகவே அதை ஏதோவொரு வழியில் அதில் சேர்க்கிறீர்கள். அறிவாளி, சரிதானே?* இல்லை. நாம் நமது வாடிக்கையாளர்களை (நமது வணிகப்பெயரையும்), எப்போதுமே முழுமையான தகவல்களை வழங்குவதன் மூலமே பாதுகாக்கிறோம். அந்த ஆய்வு முடியும் வரை காத்திருந்து, அதுகுறித்த தகவல்களை விளம்பரங்களில் உபயோகிப்பதற்கு முன் சரிபார்த்திட முடியும்.

## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### வேறு ஏதேனும் நினைவில் கொள்ள வேண்டுமா?

உரிமைக் கோரலை சரிபார்க்கும்போதும், பொருட்கள் சந்தைப்படுத்தலை ஆய்வு செய்யும்போதும் அல்லது நாம் காண்பிக்கும் ஆதாரங்களின் உண்மையை உறுதி செய்யும்போதும் – சரி பார்க்கவும், மீண்டும் சரி பார்க்கவும்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்



# பொறுப்புடன் தொடர்புக் கொள்ளுதல்

## இலக்கு

நமது நிறுவனம் பற்றிய தெளிவான மற்றும் ஒத்த செய்திகளை அனுப்புதல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

பகிர்ந்து கொள்வதற்கு நம்மிடம் ஏராளமான அற்புதக் கதைகள் உள்ளன. திருப்பித்தரும் கதைகள், வாடிக்கையாளர்களுக்கு உதவுதல், புதுமையான தீர்வுகளை உருவாக்குதல் குறித்த கதைகள். அவை நம்மை பெருமை கொள்ளச் செய்கின்றன, அதோடு அதை நாம் உலகறியச் செய்ய விரும்புகிறோம்.

அதனால் தான், Tenneco நிறுவனம் சார்பாக தகவல் தொடர்பு கொள்வதையே தங்கள் பணியாகக் கொள்கிற குழு உறுப்பினர்கள் நம்மிடம் இருக்கிறார்கள். அவர்கள் அதை, ஒத்ததாகவும், துல்லியமாகவும், முழுமையானதாகவும் இருக்கிற விதங்களில் செய்கிறார்கள்.

உங்கள் பங்கைச் செய்வதற்கு, நீங்கள் அவர்களுடையதைச் செய்ய அவர்களுக்கு உதவ வேண்டும். ஊடக கேள்விகள் அனைத்தையும் தகவல் தொடர்புக் குழுவிற்கு அனுப்பிவையுங்கள். நீங்கள் இணையத்தில் பதிவிடுவதற்கு தனிப்பட்ட பொறுப்பெடுத்துக் கொண்டு, நமது வர்த்தகப் பெயரை எவரேனும் ஒருவர் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்று நீங்கள் கருதினால், உடனே மனம் விட்டுப் பேசுங்கள்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

எங்கே திரும்ப வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளுதல். *நமது தயாரிப்புகளில் ஒன்றைப் பற்றிப் புகார் தெரிவித்திருக்கிற சமூக ஊடகப் பதிவு ஒன்றை நீங்கள் காண்கிறீர்கள். உடனடியாக பதில் கொடுத்து உங்களால் அதை விரைந்து தீர்த்துவிட முடியும் என்பது உங்களுக்குத் தெரியும். ஆயினும், நாம் தகவலளிப்பது ஒத்தவிதமாக இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்திட நீங்கள் விரும்புகிறீர்கள், ஆகவே அதற்குப் பதில், அந்தப் புகாரை நமது தகவல் தொடர்புத்துறைக்கும், விற்பனை குழுவிற்கும் அனுப்பி வைக்கிறீர்கள். நல்ல சிந்தனை தானே?* ஆம், அப்புகாரை அனுப்பி வைப்பது தான் சரியான விதம்.

### எச்சரிக்கை.

பொறுப்புடன் பதிவிடுதல். *நாங்கள் தற்போது தான் வெளியிட்ட ஒரு புதிய தயாரிப்பு பற்றி நீங்கள் குதூகலமடைந்து, அதுபற்றி சமூக ஊடகத்தில் பதிவிட விரும்புகிறீர்கள். இங்கே தவறேதும் இல்லையே, சரிதானே?* ஒருவேளை அப்படி இல்லாமல் இருக்கலாம். நிறுவனம் அங்கீகரித்த தகவல்களை மட்டுமே பயன்படுத்துவதை உறுதி செய்யுங்கள், ஏனெனில், நமது தயாரிப்புகள் குறித்து நாம் என்ன சொல்கிறோமோ அது உண்மையாக இருக்கிறது என்பதைப் பார்த்துக்கொள்ளத் தகவல் தொடர்புத்துறை கடுமையாக உழைக்கிறது. நீங்கள் நிறுவனத்துடனான "உங்கள் தொடர்பை வெளிப்படுத்த வேண்டும்", நீங்கள் இங்கே பணிபுரிகிறீர்கள் என்பதை கற்பனையாக சொல்லும் விதமாக தெரிவிக்க வேண்டும். நீங்கள் நிறுவனத்தின் சார்பாகப் பேச வேண்டுமா எனச் சந்தேகம் இருப்பின், உதவிக்குத் தகவல் தொடர்புத்துறையை தொடர்பு கொள்ளுங்கள்.



## தவறான வழி.

ஏற்புடையதல்லாத தகவல்களை பகிர்தல். *புதிய தயாரிப்பு ஒன்றை அறிமுகம் செய்வதாக வந்த வதந்தி குறித்து ஊடகத்தினர் உங்களைத் தொடர்பு கொள்கிறார்கள். நீங்களும் அதைப்பற்றி கேள்விப்பட்டுள்ளீர்கள், உங்களுக்கு தெரிந்தவற்றை பகிர்வதன் மூலம், நம்மைப்பற்றிய நல்ல அபிப்பிராயம் ஏற்படும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். சரிதானே?* தவறு. ஊடகத்திடம் பேசுவதை தொழில்முறை நிபுணர்களிடம் விட்டுவிடுவதே சிறந்தது. தகவல்களைப் பகிர்ந்து கொள்வது, எப்போது அது ஏற்றது - எப்போது ஏற்றதல்ல - என்பது நமது தகவல் தொடர்புக் குழுவினருக்குத் தெரியும். வதந்திகள் தவறானவையாகக் கூட இருக்கலாம், அல்லது அவற்றை உள் தகவல்களாகக் கூடக் கருதலாம்.



## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### சமூக ஊடகம் குறித்து மேலும் சில குறிப்புகள்?

- துன்புறுத்தல் அல்லது பாரபட்சமான பதிவு எப்போதும் தவறானது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- நீங்கள் பதிவிட்டதற்கு பொறுப்பேற்று கொள்ளுங்கள் – உங்களது வார்த்தைகள், உங்களுக்கு சொந்தமானது என மற்றவர் அறியட்டும்.
- தொலைத்தொடர்பு குழுவின் ஒப்புதலின்றி, Tennecoவின் லோகோ மற்றும் படங்களை மாற்றம் செய்யாதீர்கள்.
- ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் போன்ற அலுவலக நிறுவன வணிகத்திற்காக சமூக ஊடகம் அல்லது செயலிகளை எப்போதும் பயன்படுத்தாதீர்கள்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்

# மனித உரிமைகளை பாதுகாத்தல்

## இலக்கு

நாம் தொழில் புரியும் எல்லா இடங்களிலும் நியாயமான வேலைவாய்ப்புப் பழக்கங்களோடு செயல்படுதல், மற்றும் ஒரு குழுவினராக ஒருவரையொருவர் கவனித்துக் கொள்ளுதல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

வரவேற்பு அலுவலகத்திலிருந்து, நமது உற்பத்தி வரிசைகள் வரை, ஒவ்வொருவரின் மனித உரிமைகளையும், எங்கும் முன்னேற்றவே முதலுரிமை கொடுக்கிறோம்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதில், வியாபாரத்தை நெறிமுறையுடன் நடத்துவதையும் தாண்டிச் செல்கிறது - அது மக்களை கண்ணியத்தோடும், சமத்துவத்தோடும், கௌரவத்தோடும், மரியாதையோடும் நடத்துவதற்கானதோர் அர்ப்பணிப்பாகும். இதையே நாம் இணைந்து பணிபுரியும் நிறுவனங்களும் செய்ய எதிர்பார்க்கிறோம்.

இவை எல்லாவற்றிலும் உங்களது பங்கு என்ன? இது எளிதானது - சட்டத்தைப் பின்பற்றுங்கள், விழிப்புடன் இருங்கள், மனித உரிமைகளுக்கான நமது அர்ப்பணிப்பை மீறுகிற எதையும் நீங்கள் பார்த்தால் மனம் திறந்து பேசுங்கள். நமது பணியிடத்தில் மற்றவர்களை எப்படி நடத்துகிறார்கள் என்பதற்கு சாட்சியாக நீங்கள் முன் வரிசையில் இருக்கிறீர்கள். எங்களுக்கு நீங்கள் வேண்டும்- உங்கள் நேரம், ஆற்றல், மற்றும் சக்தி - எங்கள் லட்சியமான மக்களை முன்னிறுத்தி, ஒவ்வொரும் வெற்றிபெற அவர்களுக்குத் தேவையான ஆதாரவளங்கள் இருப்பதை உறுதி செய்வதை நிறைவேற்றித் தர.

## நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

பாதுகாப்பை பழக்கப்படுத்தல். *நீங்கள் நமது விற்பனையாளர் ஒருவரின் தொழிற்கூடத்தில் முறையற்ற விதத்தில் இயந்திரப் பாதுகாப்பு கவசம் பொருத்தப்பட்டிருப்பதையும், அதே போல அவசர வெளியேற்று கதவுகளில் சங்கிலி பொருத்தப்பட்டிருப்பதையும் காண்கிறீர்கள். யாரும் காயமடைந்து விடுவதை நீங்கள் விரும்பவில்லை, ஆகவே அப்போதே அதை அந்த இடத்தின் மேலாளரிடம் அறிவிக்கிறீர்கள். புத்திசாலித்தனமான சிந்தனை தானே?* நிச்சயமாக. பாதுகாப்பாகப் பணியாற்றும் சூழலுக்கான உரிமை நம் அனைவருக்கும் உண்டு. மனம் திறந்து பேசுவதன் மூலம், நீங்கள் மனித உரிமைகளை மேம்படுத்த உங்கள் பங்கினைச் செய்து, நம்முடன் பணியாற்றுபவர்களுக்கு மிகச் சிறந்த பழக்கங்களின் ஒரு மாதிரியாகச் செயல்படுகிறீர்கள்.

உங்களது உரிய கவனத்தைச் செலுத்துதல். *நீங்கள் அறிமுகமில்லாத ஒரு பொருள் வழங்கும் நிறுவனத்திடமிருந்து பல கார் கண்ணாடிகளை வாங்கப் பரிசீலனை செய்கிறீர்கள். அவர்கள் அது முழுவதுமாகக் கண்ணாடியால் ஆனது என்று உங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள், ஆயினும், அதன் மேல் பூசப்பட்டுள்ள எதிரொளிப்புப் பூச்சு வேறு பொருளால் ஆகிருப்பதை நீங்கள் காண்கிறீர்கள். சுரண்டிப் பார்த்த பிறகு, அது முரண்பாடானதோர் கனிமமான வெள்ளீயம் என்பதைப் புரிந்துணர்ந்து கொள்கிறீர்கள். நீங்கள் அந்தப் பொருள் வழங்கும் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு, அந்த வெள்ளீயம் கிடைத்த மூலத்தைக் குறித்த அதிகத் தகவல்களை வழங்குமாறு அவர்களிடம் கேட்கிறீர்கள். சரியான தேர்வு?* சரியானது தான். வெள்ளீயம், டேண்டாலம், டங்ஸ்டன், மற்றும் தங்கம் என்று வரும் போது, நமது பொருள் வழங்கல் சங்கிலித் தொடரில் இருக்கிற பார்வைக்கு மறைவான இடங்கள் எதையும் குறித்து நாம் உரிய கவனம் செலுத்த வேண்டும். இவற்றை எல்லாம் முரணான கனிமங்கள் என்கிறோம், ஏனெனில் சுரங்கங்களிலும், இந்தக் கனிமங்களை உற்பத்தி செய்யும் இடங்களிலும் பெரும்பாலும் மனித உரிமைகளை சமரசம் செய்து விடுகிறார்கள். பொருள் வழங்கும் அந்நிறுவனத்திடம் பேசி, நமது கொள்கையைப் பார்த்துத் தெரிந்து கொண்டு, அந்த வெள்ளீயம் மறைவான நாடு ஒன்றிலிருந்து வருகிறதா என்பதை உறுதி செய்ய, முரணான கனிமங்கள் குழுவைத் தொடர்பு கொள்ளுங்கள். அப்படி வந்தால், உடனடியாக அந்த உறவைத் துண்டித்துக் கொள்ளுங்கள்.

## எச்சரிக்கை.

**குழு உறுப்பினர் உரிமைகளைப் பாதுகாத்தல்.** *ஆக வாய்ப்புள்ள பொருள் வழங்கும் நிறுவனம் ஒன்றை நீங்கள் போய்ப் பார்த்து, அங்கே அவர்களது பொருள் வழங்கும் சங்கிலித் தொடர் குழு உறுப்பினர்களில் நிறைய பேர் வயது குறைந்தவர்களாக இருப்பதைப் பார்க்கிறீர்கள். இதை உங்கள் குழுத் தலைவருக்கும், பொருள் வழங்கல் சங்கிலித் தொடர் குழுவினரிடமும் தெரிவியுங்கள். சரியான முடிவு தானே?* ஆமாம். Tenneco நிறுவனத்தில், நாம் மனித உரிமை துஷ்பிரயோகங்களுக்கான சாத்தியத்தை உன்னிப்பாகக் கவனித்து, எப்போதாவது நாம் சந்தேகத்திற்கிடமான ஒன்றைக் காணும் பட்சத்தில், அது குறித்து மனம் திறந்து பேசுகிறோம். விசாரணையொன்றை நடத்தி முடிக்கும் வரை, ஆகக்கூடிய பொருள் வழங்கும் நிறுவனங்களின் பட்டியலிலிருந்து அவர்களை அகற்றியும் வைக்கப் பாருங்கள்.

**நியாயமாக ஊதியம் பெறுதல்.** *உங்கள் விற்பனையாளர், காலக்கெடுவைத் தாண்டி பணி செய்து வந்து, அந்நிறுவனப் பணியாளர்களை வார இறுதி நாட்களிலும் பணியாற்றச் சொல்கிறார். அந்த விற்பனை நிறுவனம் அவர்களுக்குக் கூடுதல் பணி நேரத்திற்கான சம்பளத்தைக் கொடுக்கப் போவதில்லை, அவ்வழியில் உங்களது செலவும் அதிகரிக்கப் போவதில்லை, உங்களால் உங்களது வரவுசெலவு திட்டத்தை நிவிர்த்தி செய்திட முடியும். அது சரியானதாகத் தான் இருக்க வேண்டும், சரிதானே.* ஒருவேளை. அக்குழு உறுப்பினர்கள் மணிக்கணக்கு அடிப்படையில் சம்பளம் பெறுகிறார்கள் என்றால், அவர்கள் சட்டப்படி கூடுதல் நேரப்பணிக்கு ஊதியம் பெறத் தகுதியடைகிறார்கள். கூடுதல் பணி நேரத்திற்கு ஆகும் செலவை உங்களுக்கு விதிக்காவிட்டாலும் கூட, அதற்கு அந்த விற்பனையாளரே ஊதியம் கொடுக்க வேண்டும். தங்களது குழு உறுப்பினர்களைத் தவறாக நடத்தும் நிறுவனங்களோடு நாங்கள் சேர்ந்து பணியாற்ற விரும்புவதில்லை. உங்கள் மேலாளரிடம் பேசி, இந்த விற்பனையாளரை வேறு பணியிடங்கள் எதுவும் உபயோகித்துக் கொண்டிருக்கின்றனவா எனக் கலந்தாலோசியுங்கள். மேலதிக நடவடிக்கை தேவைப்படலாம்.

## தவறான வழி.

**மோசமான நடத்தையை அலட்சியம் செய்தல்.** *நமது விற்பனையாளரில் ஒருவர், பெண்களுக்கும், சிறுபாண்மையினருக்கும் எதிராகப் பாகுபாடு காண்பிப்பது குறித்த கதை ஒன்றை நீங்கள் சமூக ஊடகத்தில் பார்க்கிறீர்கள். இதில் Tenneco நிறுவனம் ஈடுபடவில்லை என்பதால் நீங்கள் அதைக் கண்டுகொள்ளவில்லை. இதில் எதுவும் பிரச்சினையா?* ஆமாம். நமது வணிகர்கள் நமது பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். நாம் அவர்களை நமது வணிகக் கூட்டாளிகளாகத் தேர்வு செய்கிறோம், அதோடு அவர்கள் நெறியற்ற முறையில் செயல்படுகிறார்கள் என்கிற பட்சத்தில், அவர்களோடு நமக்கிருக்கும் உறவு, நாம் அவர்களது மோசமான நடத்தையை ஆதரிக்கிறோம் என்றே சொல்லலாம். நாம் அப்படி ஆதரிப்பதில்லை. நாம் எப்போதும் நாணயத்தோடு செயலாற்றுகிறோம். இதில் ஏதேனும் முறையற்றது அல்லது சட்டவிரோதமானது என்பதாக சிறு தகவல் கிடைத்தாலும் கூட உடனடியாக மனம் விட்டுப் பேசுங்கள், அதன் மூலம் சரியான ஆட்களைக் கொண்டு, அந்த உறவை மறுமதிப்பீடு செய்திட முடியும்.

## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### இதர தரப்பினருடன் பணியாற்றும்போது எதை நான் கவனத்தில் கொள்ள வேண்டும்?

எங்களுடன் பணிபுரியும், எங்களுக்காக மற்றும் எங்களது சார்பாக பணிபுரியும் ஒவ்வொருவரிடம் நாங்கள் எதிர்பார்ப்பது:

- பன்முகத்தன்மை மற்றும் உள்சேர்த்தலை ஊக்குவிக்க வேண்டும்.
- நியாயமான ஊதியம் வழங்குதல்.
- பணிக்கான பாதுகாப்பு சூழ்நிலைகளை உறுதி செய்தல்.
- அனைவரையும் சமமாக நடத்துங்கள்.
- உடல்ரீதியான தண்டனைகள் மற்றும் கட்டாய பணி செய்வதிலிருந்து பணியாளர்களை பாதுகாக்க வேண்டும்.
- குழந்தை தொழிலாளர் மற்றும் மனித கடத்தலுக்கு எதிராக போராட வேண்டும்.
- நமது முக்கிய மதிப்பீடுகள் மற்றும் சட்டங்களுக்கு மதிப்பளியுங்கள் – பணத்தை சேமிப்பதற்காக சமரசம் செய்துக் கொள்ளாதீர்கள்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்

சப்ளையர் நடத்தை குறியீடு

மனித உரிமை அறிக்கை

# சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்

## இலக்கு

காரியங்களை நாம் “எப்படி” செய்கிறோம் என்பதைப் புரிந்து கொள்வது, நாம் “என்ன” செய்கிறோம் என்பதாக நமது வெற்றிக்கு இன்றியமையாததாகும்.


## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

எதிர்காலத்தை இன்னும் சிறப்பானதாக்கவே நாம் நம்மை அர்ப்பணித்துக்கொண்டுள்ளோம். அதன் பொருள், நாம் இக்கோளைப் பாதுகாத்து, இயற்கை வளங்களை வழப்படுத்தி, மாசு ஏற்படுவதை தவிர்க்கிறோம் என்பதேயாகும்.

எப்போதும், இயக்கக்கங்களை மேம்படுத்துவதற்கான, பொருட்களை மறு-சுழற்சி செய்வதற்கான, நமது தயாரிப்புகளையும் சேவைகளையும் வாங்கும் போது, வாடிக்கையாளர்கள் இன்னும் அதிக நீண்டநாள் நீடிக்கக்கூடிய தெரிவுகளைச் செய்ய உதவுவதற்கான வழிகளை தேடுவதன் மூலமாகப் பங்களியுங்கள்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

உங்கள் கால்தடத்தைக் குறைத்தல். *இந்தக் கோளில் நமது சக்தி உபயோகத்தை 40% அளவிற்குக் குறைக்க முடியும் என்பதற்கானதோர் வழியை நீங்கள் கண்டறிகிறீர்கள். இது உங்கள் வேலைப் பொறுப்பின் ஒரு பகுதியல்ல, ஆனாலும் அதை உங்கள் குழுத்தலைவரிடம் தெரிவிக்கிறீர்கள். நல்ல யோசனை?* உள்ளபடியே! நம்மைக் கவனித்துக் கொள்ளும் இந்த பூமியைக் கவனித்துக் கொள்ள நாம் எப்போதும் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கு அல்லது கழிவுகள் அல்லது உமிழ்வுகளைக் குறைப்பதற்கானதோர் வழியை நீங்கள் கண்டுபிடிக்கிறீர்கள் என்றால் - மனம் திறந்து பேசுங்கள்.



### எச்சரிக்கை.

சிறு விஷயங்களைக் கண்காணித்தல். *உற்பத்தி முறையில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றம், தரத்தை அதிகரித்துள்ளது, ஆனால் வீணாவது 200% அதிகரித்துள்ளது. இதில் ஏதேனும் பிரச்சினை உள்ளதா?* கூடுதல் நேரம், ஆமாம். தொழிற்சாலையில் உள்ள சரியானவர்களிடம் தகவல் தெரிவியுங்கள், அதன் மூலம் அவர்கள் ஏன் கழிவு இந்த அளவு அதிகரித்துள்ளது என்பதை கண்டறிந்து, அவற்றைக் குறைப்பதற்கான அல்லது மறு-சுழற்சி செய்வதற்கான வழிகளைக் கண்டறிவார்கள்.

எங்களது அனைத்து தயாரிப்புகளுக்கான வழங்கல் சங்கிலி தொடரில் நாங்கள் சுற்றுசூழல் தரங்களை பூர்த்தி செய்கிறோம் அல்லது அதற்கும் மேலாகவும் பூர்த்தி செய்கிறோம்.




## தவறான வழி.

அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளதை அலட்சியம் செய்தல். *நம் சேமிப்பு கொள்கலன் ஒன்றிலிருந்து, தீங்கு விளைவிக்கக்கூடிய திரவம் ஒன்று கசிகிறது என்பதை நீங்கள் காண்கிறீர்கள். இதுபற்றி ஏதேனும் சொல்வதற்கு பதில், மாறாக நீங்கள் வேறு கொள்கலனை பயன்படுத்துகிறீர்கள். சரியான தேர்வா?* இல்லை. நீங்கள் இதுபற்றி குரல் எழுப்பியிருக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், சிந்துவது, அதனுடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் தீங்கு தவிர்க்கப்பட்டிருக்க முடியும்.

## பாதையை முன்னடத்தி செல்வீர்
(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### இயற்கை வளஆதாரங்களுக்கான குறிப்புகள்:

- நீர் ஆதாரங்களை பாதுகாத்தல்.
- கழிவுகளை குறைத்தல்.
- எரிசக்தியை சேமித்தல்.
- அட்டைபெட்டியை தவிர்த்தல்.
- ஆதாரத்தை பொறுப்பாக தேர்ந்தெடுத்தல்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்

# சமூகத்திற்கு திரும்ப அளித்தல்

## இலக்கு

நம்மைச் சுற்றி உள்ள சமூகங்கள் மீது நேர்மறை விளைவினை கொள்ளுதல்.

## நாம் அங்கே எப்படிச் சென்றடைகிறோம்

நாம் ஒவ்வொருவரும், ஓர் வேறுபாட்டை ஏற்படுத்துவதற்குரிய ஆற்றலைக் கொண்டுள்ளோம். இதனை எப்போதும் நீங்கள் மனதில்கொள்ளுமாறு நாம் ஊக்கப்படுத்துகிறோம், மேலும், உங்களுக்கு தனிப்பட்டமுறையில் பயனுள்ளதாக கருதுபவற்றை சமூகத்திற்கு திருப்பிச்செய்யுங்கள் என்கிறோம்.

மேலும், நினைவில் கொள்ளுங்கள், நமது காலம், ஆற்றல் மற்றும் வளங்களை ஒரு நிறுவனமாக நாம் திரட்டும்போது, நாம் முன்னெட்டிச் செல்லலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நிதிதிரட்டுதல், தன்னார்வு தொண்டாற்றுதல் மூலம், நாம் வாழும் சமுதாயத்தை மாற்றி, சிறந்ததை நோக்கி பணியாற்றலாம்.

### நன்னெறி சார்ந்த நடத்தைக்கான முன்னுதாரணம்.

கிரியாவூக்கியாக இருங்கள். *உள்ளூர் சமூக அமைப்பு ஒன்றிற்கு நிதி திரட்ட நீங்கள் விரும்புகிறீர்கள், அந்த அமைப்பு பன்முகத்தன்மை முன்முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கிறது, எனவே உங்கள் மேலாளரை தொடர்பு கொண்டு, நிதித் திரட்டுதல் மற்றும் தொண்டு நாள் ஒன்றிற்கு ஏற்பாடு செய்ய முற்படுறீர்கள். சரியான தெரிவா?* நிச்சயமாக. உள்ளடக்கிய மற்றும் பன்முகத்தன்மை போன்றவற்றை ஊக்குவிக்கிறோம், அதைச் செய்வதற்கு இது ஒரு வழியாகும். நீங்கள் உங்கள் வேலைக்கு வெளியே தொண்டாற்ற விரும்பினால், உங்கள் பங்கேற்பு உங்கள் வேலைக்கு எதிர்மறை பாதிப்பை ஏற்படுத்தாமல் அல்லது முரண் ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் மேலாளரிடம் முதலில் பேசுவது இதை சிறப்பாக செய்வதற்குரிய வழியாக அமையலாம்.



## எச்சரிக்கை.

முதலில் கோரல். *உங்கள் வாடிக்கையாளர் அவர் ஆதரிக்கும் நல்ல காரியம் ஒன்றிற்காக உங்களிடம் நன்கொடை கேட்கிறார். நீங்கள் அந்த சமூகத்திற்கு ஆதரவளிக்க விரும்புகிறீர்கள் மற்றும் உங்கள் வாடிக்கையாளருடனான உறவினை மேம்படுத்த விரும்புகிறீர்கள். இது சரியா?* இருக்கலாம். இதனை உறுதி செய்ய, உங்கள் மேலாளர் அல்லது, மனித வளங்கள் துறையில் யாருடனாவது பேசுங்கள். நம் சமூகங்களை ஆதரிக்க நாம் விரும்பும் நேரத்தில், அறக்கொடை, சரியான சட்டபூர்வமான பணிகளுக்குத்தான் போகிறதா, நம் நாணயத்திற்கான உறுதிப்பாட்டுக்கு ஏற்ப அமைந்துள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். நீங்கள் இதை நம்புவதற்கு கடினமாக இருக்கும், ஆனால் சில நேரங்களில் நன்கொடைகள் லஞ்சம் கொடுக்க பயன்படுத்தப்படுகின்றன.

## தவறான வழி.

உங்கள் தனிப்பட்ட நோக்கத்திற்காக வர்த்தகத்தை இணைத்தல். *நீங்கள் தனிப்பட்ட முறையில் அறக்கட்டளை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளீர்கள். அதற்கு நம் சப்ளையர்களிடமிருந்து நிதி திரட்ட Tennecoவின் முத்திரை பதித்த கடிதத்தாளை பயன்படுத்த விரும்புகிறீர்கள். இது சரிதானா?* இல்லை. Tennecoவின் முத்திரை கொண்ட கடிதத்தை பயன்படுத்துவதற்கு முன் நீங்கள் அதற்கு ஒப்புதல் பெற வேண்டும். உங்கள் முன்முயற்சியை தொடர்பு குழுவிடம் விவாதியுங்கள், உங்கள் தனிப்பட்ட அறக்கட்டளை நடவடிக்கையில் நமது சப்ளையர்களை ஈடுபடுத்துவதில் Tennecoவின் பெயரை எப்படி பயன்படுத்துவது என்று புரிந்து கொள்ளுங்கள். ஆதாய முரண் ஏற்படாமல், அதற்கான தோற்றம் ஏற்படுவதை தவிர்க்க முயற்சியுங்கள். நமது சப்ளையர்களுடனான நம் உறவு வர்த்தகத்தின் அடிப்படையில் மட்டும்தான் அமைய வேண்டும்.

## பாதையை முன்னடத்தி செல்வீர்

(உங்கள் அனுமதியை தக்க வைக்க யோசனைகள்)

### திரும்ப அளிப்பதற்கான குறிப்புகள்:

நமது குழு உறுப்பினர்களில் பலர் தனிப்பட்ட முறையிலான தொண்டு உறுதிபாடுகள் மற்றும் நாம் குழுவாக சில உறுதிபாடுகளை கொண்டுள்ளது குறித்து நாம் பெருமை கொள்கிறோம்.

- தயவு செய்து, நிறுவனம் சார்பாக தொண்டு பணிகளுக்கு உதவுவதற்கான பிற வாய்ப்புகள் குறித்து மதிப்பிடுவதற்கு தகவல் தொடர்பு குழு அல்லது மனிதவள ஆதாரங்கள் பிரிவை தொடர்பு கொள்ளவும்.

## மோட்டார் வாகனம் பழுதுபார்க்குமிடம்

# உங்கள் உரிமத்தைப் பெறுதல்

இங்கே உங்களுக்கு இருக்கிறது - **Tennecoவில் நீங்கள் செயல்பட உரிமத்தைப்** பெறும் வழிமுறை குறித்த தகவல். நமது விதிகளை வாசிக்க நேரத்தை செலவிட்டதற்கும், தொடர் வெற்றிக்கு ஆதரவாக நீங்கள் செய்யும் அனைத்திற்கும் உங்களுக்கு நன்றி. உங்களுக்கு யோசனைகள் தோன்றும்போது, கேள்வி எழும்போது, கவலை ஏற்படும்போது அதுபற்றி பேசுவதற்கும் நன்றிகள்.

நமது விதிகளை புரிந்து கொள்வது Tennecoவில் நீண்ட தூரம் பயணிக்க அவசியமானது. இது நமது நோக்கத்திற்கும் முக்கிய மதிப்பீடுகளுக்கும் உந்துதலாக உள்ளது. நமது இறுதி இலக்கை எட்டுவதற்கு திசைகாட்டுகிறது: நமது வர்த்தகத்தை நேர்மையுடன் இயக்குதல்.

நீங்கள் தயாரானால், அதாவது, நீங்கள் நம் விதியை வாசித்து, புரிந்துகொண்டு, அதை பின்பற்றுவீர்களானால், கீழே உங்கள் பெயரை கையொப்பமிடுவீர்கள்:

ஒப்பம்: ______________________________

தேதி: ______________________________

நீங்கள் இப்போது **Tennecoவில் இயங்க உரிமத்தைப்** பெற்றுள்ளீர்கள். உங்கள் மனித வள பிரதிநிதியிடம் கையொப்பமிட்ட இந்த பக்கத்தை தயவு செய்து வழங்குங்கள்.

செயல்பட உரிமம் TENNECO

நீங்கள் பின்வருவனவற்றின் விதிமீறல் ஒன்றைப் பார்க்கும் பட்சத்தில் அல்லது சந்தேகிக்கும் பட்சத்தில்:

- நமது முக்கிய மதிப்பீடுகள் அல்லது விதிகள்
- நமது கொள்கைகள் மற்றும் வழிமுறைகள்
- எந்தவித சட்டம் அல்லது கட்டுப்பாடுகள்

வாரத்தில் 7 நாட்களில் 24 மணிநேரமும் கட்டணமில்லா தொலைபேசி வசதி மூலம்

**Tenneco Hotline** க்கு நீங்கள் அழைக்கலாம்

உங்களது உள்ளூர் Hotline தொலைபேசி எண்ணை எழுதவும்.

அல்லது **https://secure.ethicspoint.com/domain/media/en/gui/29312/index.html**

உள்ளூர் சட்டங்களுக்கேற்ப, அனைத்து அழைப்புகளும் ரகசிய அடிப்படையில் பராமரிக்கப்படும்.

பண அட்டையை அச்சிட்டு, அளவாக வெட்டி, புள்ளியிட்ட கோட்டில் மடிக்கவும்.

”சரியானவற்றை சரியான வழியில் செய்ய வேண்டும்” என்பதை நினைவில் கொள்ளவும்.

நெறிமுறை பிரச்சினை அல்லது தவறான செய்கையினை நீங்கள் அறியும்போது, Tennecoவின் குழுவின் உறுப்பினர் என்ற முறையில், அது குறித்து தெரிவிக்க வேண்டும். மனம் திறந்து பேசுங்கள்!

TENNECO செயல்பட உரிமம்